வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : news@eelanadu.lk | மலர் : 03 | 04.06.2022 சனிக்கிழமை | இதழ் : 180 | பக்கங்கள் : 16


# போரில் மரணமான இராணுவம் குறித்து தமிழர்களாகிய நாம் வருந்துகின்றோம்!

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன். 04

“போரில் மரணமடைந்த தமிழ் மக்களைப் போன்று போரால் மரணமடைந்த இராணுவத்தினர் தொடர்பிலும் தமிழ் மக்களாகிய நாம் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறான ஒரு நிலைக்கு நாம் வந்துள்ளோம் என்பது மகிழ்ச்சியளிக்கின்றது.”

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அழைப்புவிடுக்கப்படும் இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றியும் கவனம் செலுத்து

15

# வடமராட்சி விபத்துக்களில் மாணவன் ஒருவர் மரணம்!

## நான்கு பேர் படுகாயம்

வடமராட்சி, ஜூன் 04

வடமராட்சியில் நேற்று இரு வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார். நால்வர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கரணவாய், குஞ்சர் கடைப் பகுதியில் மோட்

15

# புலி ஆதரவு குழுக்களால் கணிசமான அச்சுறுத்தல்!

## சொல்கிறார் பாதுகாப்பு செயலர்



கொழும்பு, ஜூன். 04

பிரிவினைவாதத்தை கோரிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வெளிநாட்டு சக்திகள் மற்றும் உள்நாட்டில் அதன் மறைமுக ஆதரவுக் குழுக்களால் கணிசமான அச்சுறுத்தல்கள் உள்ளதாக பாதுகாப்புச் செயலர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

15

# மாணவியை கடத்த முயன்றோர் வட்டுக்கோட்டையில் சிக்கினர்!

மானிப்பாய், ஜூன் 04

வீதியில் சென்ற மாணவியை கடத்த முயன்றவர்களை இளைஞர்கள் மடக்கிப் பிடித்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பகல் 3 மணியளவில் வட்டுக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய

15

# “காய்க்கும் மரமே கல்லடி படும்” 21 குறித்து பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, ஜூன் 04

“காய்க்கும் மரமே கல்லடி படும்”, என்று முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சொத்துக் குவிப்பு குறித்த மல்வானை வீடு தொடர்பான வழக்கின் தீர்ப்பில் பஸில் ராஜபக்ஷ குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார்.

தீர்ப்பின் பின்னர் பஸில் ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள், “தீர்ப்பு குறித்து என்ன நினைக்கின்

15

# தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்து வவுனியாவில் 3 வயது சிறுமி பலி!

வவுனியா, ஜூன். 04

வவுனியா, பூவரசன் குளம் பகுதியில் தண்ணீர் தொட்டியில் விழுந்து 3 வயது சிறுமி மரணமடைந்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் இருந்து தாய்

15

# தொலைபேசி கட்டணங்கள் நள்ளிரவு முதல் அதிகரித்தன!

கொழும்பு, ஜூன் 04

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தொலைத் தொடர்பு வரி 11.25 சத வீதத்திலிருந்து 15 சத வீதமாக அதிகரிக்கப்படும் என இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனையடுத்து தொலைபேசி அழைப்புக் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன.

15

# மின் கட்டணம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 04

புதிய மின்சார திருத்தக் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வரி அதிகரிப்பு அமைவாக இவ்வாறு மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வ

15

# கடற்படையினர் தாக்கியதில் 7 மீனவர் மருத்துவமனையில்!

மன்னார், ஜூன் 04

மன்னார் பேசாலையில் இருந்து கடல் தொழிலுக்கு சென்ற மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் கடும் தாக்குதலுக்கு இலக்கான 7 மீனவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பேசாலையில் இருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கடலுக்குப் புறப்படத் தயரான படகுகளை கடற்படையினர் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர். இதன்போது, கடற்படையினருக்கும் மீனவர்களுக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, கடற்படையினர் மீனவர் ஒருவரை தாக்கினர். இதில் காயமடைந்தவர் பேசாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன் பின்னர் மீன

15

# பிரகீத் வழக்கு விசாரணை; 9 படையினருக்கு மறியல்!

கொழும்பு, ஜூன் 04

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் பிணை வழங்கப்பட்ட இராணுவ புலனாய்வு பிரிவின் 9 பேரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் நேற்று உத்தரவிட்டனர்.

சஞ்சீவ மொராயஸ், தமித் தொடவத்த, மஹேன் வீரமன் உள்ளிட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ரணில் விக்கிரமசிங்க பற்றி இந்தப் பத்தியில் முன்னரும் பலதடவைகள் எழுதியாகிவிட்டது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக முதல்தடவை வெற்றிபெற்றது எந்தவகையில் என்பது இங்கே எழுதித் தெரியவேண்டியதில்லை.

விடுதலைப் புலிகள் அந்த தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியிருக்குமாறு கேட்காமல் விட்டிருந்தால், ரணிலே அப்போது வெற்றிபெற்றிருப்பார்.

இந்தக் கருத்திலும் யாரும் முரண்படப்போவதில்லை.

ஆனால், மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது, ரணில் எதிர்க்கட்சித் தலைவர். ஐக்கிய தேசியக் கட்சியில் ரணிலின் தலைமை குறித்து பல உள் குழப்பங்கள் ஏற்பட்டபோதெல்லாம், ரணிலை ஏன் மஹிந்த காப்பாற்றினார் என்பதும் தெரிந்ததுதான்.

ரணிலின் கையில் ஐக்கிய தேசியக் கட்சி இருப்பது தனது அரசியல் பயணத்திற்கு சுலபமானது என்ற மஹிந்தரின் கணிப்பும் விண்போகவில்லை.

அதனால்தான், ரணிலே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவை பொதுவேட்பாளராக்க சம்மதித்தார். அதற்குப் பின்னரும், ரணில் ஒரு பலவீனமான வேட்பாளர் என்பதை அவரோடு நின்றவர்கள் நம்பியதால்தான், வேறு வழியின்றி மைத்திரியை பொதுவேட்பாளராக்கவும் அவர் சம்மதித்திருந்தார்.

அதற்காக, தான் பலவீனமான ஒரு வேட்பாளர் என்று அவரும் ஏற்றுக்கொண்டதாக நாம் அர்த்தம்கொள்ள முடியாது.

இன்று, எல்லாமே தலைகீழாக மாறியிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் என்றுமில்லாதவாறு அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்க, ரணில் தனி ஒரு மனிதனாக அந்த பாரத்தைச் சுமக்க வந்ததை பலரும் பல்வேறு விதமாக விமர்சனம் செய்தாலும், அவரது துணிச்சலை அமெரிக்கா, இந்தியா மாத்திரமன்றி, முழு உலகமும் வியப்போடு பார்த்ததையும், அவரை வாழ்த்தி, உற்சாகப்படுத்தியதையும் பார்க்கமுடிந்தது.

இன்று, ராஜபக்ஷ சகாப்தம் முடிந்துவிட்டது என்று பலரும் எழுதியும் பேசியும் வந்தாலும், அப்படி முடிவெடுத்துவிடுவது சரியானதுதானா என்பது தெரியவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த நாமல் ராஜபக்ஷ, தனது நண்பர்கள் சிலருடன் தனிப்பட்ட ரீதியில் அந்தக்கால அரசியல் நிலைமைகள் குறித்து பேச்சிக்கொண்டிருந்ததை கேட்கும் சந்தர்ப்பம் இந்த ஊர்க்குருவிக்கும் கிடைத்திருந்தது.

அப்போது அவர் தனது நண்பர்களோடு பேசிக்கொண்ட விடயங்கள் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன.

எரிபொட்களுக்கான கியூக்ள் ஆங்காங்கே தோன்றத் தொடங்கியிருந்த காலம் அது.

விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவும் அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட சில நாட்கள்தான். அவர்கள் அரசாங்கம் அமைப்பதற்காக முயன்றுகொண்டிருப்பதாக அரசல்புரசலாக கதைபட்டுக்கொண்டிருந்தபோது நல்லது, அவர்கள் இந்தப் பாரத்தை சுமக்கட்டுமே என்று மஹிந்த கூறினாராம்.

அதுமாத்திரமன்றி, கிராமங்களில் உள்ள உள்ளூர் கட்சித் தலைவர்கள் தங்களால் கிராமங்களுக்குள் தலைகாட்ட முடிய வில்லை என்று முறைப்பாடுகள் சொல்லிக்கொண்டிருந்தார்களாம்.

அவர் சொன்ன பல விடயங்களை இங்கே தருவது அரசில் நாகரீகமாக இருக்காது என்பதால் தவிர்த்து விடுகின்றோம். பொது ஜன பெரமுனை என்ற கட்சியைப் பொறுத்தவரை அடுத்த தேர்தலில் யாராவது வெற்றிபெறவேண்டும், அவர்களால் நாட்டை கொண்டுநடாத்தக்கூடிய அளவிற்கு பொருளாதாரம் உதவப் போவதில்லை. அந்த நேரத்தில், எதிரணியில் இருந்து அரசியல் செய்வதுதான் இலகுவானது என்று அவர்கள் கணக்குப் போடுவதும் சரியானதுதான்.

ஆனால் இன்று அந்த முகாம் மாத்திரமன்றி, எதிரணியும் ஆளுமையுள்ள தலைமை இல்லாததால் தடுமாறிக்கொண்டுதான் இருக்கின்றது. என்னதான் இருந்தாலும், இடைக்கால அரசாங்கத்தை துணிச்சலுடன் பொறுப்பெடுத்து தனது ஆளுமையை சஜித் வெளிப்படுத்தியிருக்கவேண்டும் என்ற கருத்து அவர்களது கட்சிக்குள்ளேயே பெரும்பாலானவர்களிடம் உண்டு.

இந்த விடயத்தில் அவர் சறுக்கிவிட்டதாகவே தெரிகின்றது.

இன்று, ரணிலின் தலைமைக்கு மேற்குலகு குறிப்பாக, அமெரிக்காவும் இந்தியாவும் காட்டிவரும் ஆதரவு, அவரை பலமடங்கு உயர்த்தியிருக்கின்றது.

அவர் விரும்பியது போலவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஒவ்வொன்றாக செய்துகாட்டத் தொடங்கியிருக்கின்றார். வரி அதிகரிப்புக்கள் செய்தாகிவிட்டது. அரச செலவினங்கள் குறைப்பு ஒவ்வொன்றாக நடக்கின்றது.

ரணிலால் மாத்திரமே இதனைச் செய்யமுடிந்துது என்ற தோற்றத்தை ஏற்படுத்த, இனி அவரை தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க விரும்பும் சக்திகள் செயலைத் தொடங்கவிருக்கின்றன.

இருபத்தியோராவது அரசியலமைப்பு திருத்தத்தை என்ன விலைகொடுத்தும் மேற்கொள்வது என்பதிலும் அவர் உறுதியோடு இருப்பதாக தெரிகின்றது. அது தொடர்பாக கடந்த வாரம் அனைத்துக் கட்சிகளோடு நடத்திய சந்திப்பிலும், இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றம் செல்வதை தடுப்பதற்கு பசில் தரப்பு இடம்கொடுக்காவிட்டால் அதனை தவிர்த்தாவது இருபத்தி ஒன்றை கொண்டுவரவேண்டும் என்ற சாரப்பட அவர் கருத்து தெரிவித்ததாக அந்த கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

ஆக, அடுத்த ஆட்டம் ஒன்றுக்கு ரணில் தயாராகி வருகின்றார். அல்லது, அவரை தயார்படுத்தத் தொடங்கியிருக்கின்றன அவரை விரும்பும் சக்திகள் என்பது மட்டும் புரிகின்றது.

**- ஊர்க்குருவி**

# புதிய கூட்டணியின் பெயர், தலைமை; தீர்மானிக்கவில்லை என்கிறார் விமல்

கொழும்பு, ஜூன் 04

புதியக் கூட்டணியின் பெயர் தொடர்பாகவே, யார் தலைமை வகிப்பார்கள் என்பது தொடர்பாகவோ இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

முற்போக்குகொள்கைகளை கொண்ட அரசியல் கட்சிகளுடன் இணைந்து உருவாக்க திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ஸ, புதிய கூட்டணியின் தலைவராக தனது பெயரை முன்மொழிவதற்கு வாசுதேவ நாணயக்காரர் தயாராக உள்ளார்.

மேலும், இலங்கை எதிர்கொண்டுள்ள சமூக அரசியல் நெருக்கடிகள் குறித்து கட்சியின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. மக்களுக்கு எவ்வாறு உதவுவது என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம்.

அத்தோடு, குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாம் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்காக மக்கள் நிதானத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் செயற்படவேண்டும்- என்றார். (அ)

# எச்.எஸ்.பி.சி. வங்கி அனுசரணையில் மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு!

கொழும்பு, ஜூன் 04

இலங்கைக்கான ஆசிய - பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பு, எச். எஸ். பி. சி. வங்கியின் அனுசரணையில் இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் மருந்துப் பற்றாக்குறை தேவையை கணிசமானளவு நிவர்த்தி செய்யும் வகையில் சுகாதார அமைச்சால் பட்டியலிடப்பட்ட முக்கியமான மற்றும் அத்தியாவசியமான மருந்துகளிலிருந்து இருதயம் சார் நோய்கள், புற்றுநோய், மயக்க மருந்துகள், முள்ளந்தண்டு சார்ந்த நோய்கள், எலும்பு அடர்த்தி சார்ந்த நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

கொழும்பு ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் இராஜாங்க செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க, எச். எஸ். பி. சி. வங்கியின் பதில் நிறைவேற்று அதிகாரி கெலும் எதிரிசிங்க, இலங்கைக்கான இடர் முகாமைத்துவ நிலைய இயக்குநர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, பொது சுகாதார சேவைகளின் பிரதிப்பணிப்பாளரும், சுகாதார அமைச்சின் தொடர்பாடல் பணிப்பாளருமான மருத்துவர்ஹேமந்த ஹேரத், பிரதமர் செயலகம் சார்பாக பாலித்த விக்கிரமகே, எச். எஸ். பி. சி. கூட்டுறவு நிலைத்தன்மை முகாமையாளர் திலினி பெர்ணாந்து, இலங்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு இயக்குநர் பிர்சான் ஹசிம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)



## சங்காபிஷேகம்

வடமராட்சி, ஜூன் 04

பருத்தித்துறை ஸ்ரீமுனிஸ்வரன் கோவில் வருடாந்த மஹா சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இந்த சங்காபிஷேகத்தை கோவிலின் பிரதம குரு ஸ்ரீ துஷ்யந்தக் குருக்கள் நடத்தி வைப்பார். (ஐ-2)

## லாப்ஸ் எரிவாயு விநியோகமும் வெகுவிரைவில்!

கொழும்பு, ஜூன் 04

லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுக் கப்பல் இன்று இலங்கைக்கு வரவுள்ளதாக லாப்ஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பலில் சுமார் 3,000 மெற்றிக் தொன் எரிவாயு கையிருப்பு உள்ளது என்று அதிகாரி கூறினார்.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக லாப்ஸ் எரிவாயு விநியோகம் நடைபெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# டொலர்கள் சம்பாதிப்பதற்கு சிறந்த வழி கூறுகிறார் சஜித்

கொழும்பு, ஜூன் 04

தகவல் தொழிற்நுட்பத் துறையில் ஏற்றுமதிகளை அதிகரிப்பதே டொலர்களை சம்பாதிக்கக்கூடிய சிறந்த வழிமுறையாக இருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவிசாவளையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தகவல் தொழிற்நுட்பத் துறையின் மூலம் நாட்டுக்கு தேவையான டொலர்களை ஈட்ட முடியும். இதனால், தகவல் தொழில்நுட்ப துறையின் ஏற்றுமதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அரசாங்கத்தின் பணப்பையில் பணமில்லை. வங்குரோத்து அரசாங்கமும் நாடுமே தற்போது இருக்கின்றது. அரசாங்கம் வங்குரோத்து அடைந்துவிட்டாலும் எதிர்க்கட்சி நாடுக்காக அர்ப்பணிப்புகளை செய்யும்.

ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டை அழித்தது. அந்த அரசாங்கத்துக்கு பதிலாக தற்போது மறுசுழற்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போதுஉணவு பிரச்னைஉருவாகியுள்ளது.

பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுமாறு நாட்டில் வாழும் 220 இலட்சம் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன். இதற்காக ஐக்கிய மக்கள் சக்தி வலுவை பெற்றுக்கொடுக்கும்-என்றார். (அ)

# லேடிரிட்ஜ்வே வைத்தியாலையில் சிறுவரின் உணவுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, ஜூன் 06

பொரளை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தற்போது உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, குறித்த வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையிலேயே தற்போது இந்த நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அந்த வைத்தியசாலையில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கும் தினசரி உணவில் இறைச்சி, மீன், முட்டை, பருப்பு உள்ளிட்ட புரதச் சத்துமிக்க உணவுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீக்காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கு தினமும் முட்டைகள் கொடுக்கவேண்டும் என்ற போதிலும், தற்போது குறித்த சத்துமிக்க உணவு வகைகளை கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில், தற்போது சிறுவர்களுக்கு ஒரு கொடையாளரிடமிருந்து குறைந்த எண்ணிக்கையிலான முட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவை முடிந்த பின்னர் அந்த குழந்தைகளுக்கு முட்டைகளை வழங்க முடியாத நிலைமை மீண்டும் ஏற்படும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ)

ஈழநாடு
Eelanadu
04.06.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கால விரய அரசியல்?

புதிய அரசியலமைப்பின் மூலம் தமிழ் மக்களின் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்று, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். புதிய அரசியலமைப்பு தொடர்பான கதைகள் அனைவருக்கும் பழக்கமான ஒன்றுதான். ஆனால், எப்படி - யாரால் அதனை செய்ய முடியுமென்பதுதான் கேள்வி. புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேசப்படுகின்றபோதெல்லாம், கூடவே இந்தக் கேள்வியும் எழுவதுண்டு. ஆனால், எவரிடமும் அதற்கான பதிலில்லை.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியிலிருக்கும்போது, இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, விடயங்களை முன்னெடுக்க வேண்டுமென்று கூறுவது இலகுவானது. ஆனால், பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணமான தமிழர் விவகாரத்தை நோக்கும் புரிதல் தென்னிலங்கையில் இல்லை. இது ஒரு தமிழர் புரிதலாக மட்டுமே இருக்கின்றது. கட்டமைப்பு மாற்றங்கள் வேண்டுமென்று கூறுபவர்கள்கூட, அதனை எவ்வாறு முன்னெடுப்பது, இதன்போது, தமிழருக்கான அரசியல் தீர்வு எவ்வாறானதாக அமைய வேண்டுமென்று பேசுவதற்கு முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் நோக்கினால், கடந்த 74 வருடங்களுக்கும் மேலாக, இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசிய போதிலும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற, மாகாண சபை ஒன்றுதான் மிஞ்சிக் கிடக்கின்றது. புதிய அரசியல் யாப்பின் மூலம் பிரச்னைகள் தீர்க்கப்பட்டால் அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான் - ஆனால், இவ்வாறு புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழர்கள் மேலும் பின்நோக்கி செல்லும் நிலைமைதானே காணப்படுகின்றது. கடந்த ஆட்சிக் காலத்தில், புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்பட்டது. ஆனால், இறுதியில் எதுவும் நடைபெறவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பு மிகவும் நெருக்கமாக செயல்பட்டிருந்தது. ஆனால், அதே ரணில் விக்கிரமசிங்கவுடன் இப்போது முரண்டுபிடிக்கின்றது. ஆனால், இந்த இடைப்பட்ட காலத்தில், தமிழர்கள் அரசியல் ரீதியில், பொருளாதார ரீதியில் முன்னோக்கிச் செல்ல முடிந்ததா?

இப்போது 21ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசப்படுகின்றது. இந்த நிலையில், மீளவும் புதிய அரசியலமைப்பு தொடர்பில் சுமந்திரன் பேசுகின்றார். சுமந்திரன் கூறும் புதிய அரசியலமைப்பின் மூலம் தமிழ் மக்களின் பிரச்னையை தீர்க்கும் வகையில், உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும், அழுத்தங்களை கொடுப்பதற்கான அரசியல் பலம், கூட்டமைப்பிடம் இருக்கின்றதா? நாடு தற்போதுள்ள நிலையில் புதிய அரசியலமைப்பை கொண்டுவருவதன் மூலம் - எவ்வாறு பொருளாதார நெருக்கடியை தீர்க்க முடியும்? அவ்வாறான அழுத்தமொன்றை பிரயோகிக்கக்கூடியளவுக்கு வெளித்தரப்புக்கள் இருக்கின்றனவா? தமிழ்த் தேசிய தரப்புக்கள் இவ்வாறான கேள்விகளை முன்னிறுத்தி, ஆகக் குறைந்தது தங்களுக்குள்ளாவது சிந்திக்க முன்வர வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை முன்கொண்டு செல்ல வேண்டுமென்பதிலேயே இந்தியாவும் மேற்குலகமும் கரிசனை காண்பிக்கும். இந்த நிலையில் புதிய அரசியலமைப்பு பற்றி பேசி, ரணிலுக்கு நெருக்கடிகளை கொடுப்பதை மேற்குலகம் விரும்பாது. இதுதான் தற்போதுள்ள நிலைமை. இந்த பின்புலத்தில் நோக்கினால், இப்போதுள்ள சூழலில், புதிய அரசியலமைப்பு தொடர்பில் விவாதிக்கக்கூடிய நிலையில் நாட்டின் அரசியல் சூழலும் இல்லை, தென்னிலங்கையின் அரசியல் தரப்புக்களும் இல்லை. இதனை விளங்கிக்கொண்டுதான் புதிய அரசியலமைப்பு தொடர்பில் ஆசைப்பட வேண்டும்.

21ஆவது திருத்தச்சட்டம் எவ்வாறான விடயங்களுடன் நிறைவேறும் என்பது தொடர்பில் இப்போதைக்கு எதனையும் கூற முடியாது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க முன்னோக்கி பயணிக்கக் கூடியளவுக்கான மாற்றங்கள் இடம்பெறலாம். இதற்குள் ஆகக்குறைந்தளவு, மாகாண சபை விவகாரத்துடன் தொடர்புடைய விடயங்களை உட்புகுத்த முடிந்தால், அதுவே கூட்டமைப்பின் வெற்றியாக இருக்க முடியும். இதனைவிட்டுவிட்டு, புதிய அரசியல் யாப்பு தொடர்பில் விவாதங்களை முன்னெடுத்தால், மீண்டும் தமிழர்களின் நேரம் வீணடிக்கப்படும் நிலைமையே உருவாகும். யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதின்மூன்று வருட கால தமிழர் அரசியலை ஒரு வரியில் சொல்வதனால் - கால விரய அரசியலென்றே கூற முடியும். கால விரய அரசியலை விடுத்து, சூழ்நிலைகளை திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ளும் தந்திரோபாய அரசியல் தொடர்பிலேயே தமிழர் தலைமைகள் என்போர் சிந்திக்க வேண்டும்.

# கேள்விக்குறியாகியுள்ள மனித உரிமைகள் காப்பகத்தின் நம்பகத்தன்மை!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமான நிலவரத்தை அடைந்துள்ளமையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கொழும்பிலுள்ள மனித உரிமைகள் காப்பகம் அறிக்கையொன்றில் பட்டியலிட்டு அனுப்பி வைத்துள்ளது.*

*இலங்கை மனித உரிமைகள் காப்பகம் இவ்வாறு மனித உரிமைகள் இலங்கையில் மீறப்படுவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு விரிவான அறிக்கை மூலம் சுட்டிக்காட்டியுள்ளதை நோக்கும்போது இதுவரை காலமும் இலங்கையில் உள்ள மனித உரிமைகள் காப்பகம் எங்கிருந்தது? அல்லது திடுதிப்பென அதற்கு எங்கிருந்து இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து பொறி தட்டியிருந்தது ? என்ற கேள்வியே மேலெழுவதை அவதானிக்க முடிகின்றது.*

*மனித உரிமைகள் காப்பகம் இலங்கையில் இயங்கலாம். ஆனால், இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றமையை ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் பேரவையில் முதல் தடவையாக முன்வைக்கப்பட்டது வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்தே என்பதை கொழும்பிலுள்ள மனித உரிமைகள் காப்பகம் மட்டுமல்ல, மனித உரிமைகளுக்காக குரல் எழுப்பும் அனைத்து இலங்கையர்களும் அறிந்திருக்க வேண்டும்.*

*கொழும்பிலுள்ள மனித உரிமைகள் காப்பகம் பட்டியலிட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையை நோக்கும்போது மூன்று தசாப்த கால யுத்தத்தின்போது வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக கொழும்பு மனித உரிமைகள் காப்பகம் பாரபட்சமற்ற முறையில் நடந்து கொண்டதா? என்ற கேள்வியே தோன்றுகின்றது.*

*2009ஆம் ஆண்டு இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்தது முதல் வடக்கு - கிழக்கில் அப்பட்டமாக மீறப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டப்பட்டு வந்திருந்தது.*

*அப்போதெல்லாம் இலங்கையில் உள்ள மனித உரிமைகள் காப்பகம் மௌனம் காத்து வந்ததோடு ஒரு சர்வதேச அமைப்பின் கிளை அலுவலகம் என்ற வகையில் தனது கடமையை சரிவரச் செய்யத் தவறியிருந்தது.*

*இந்த மாதம் 27ஆம் திகதி முதல் ஜூலை 27ஆம் திகதி வரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 135ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. அந்தக் கூட்டத்தொடரின் போதே இலங்கையில் அண்மைக்காலங்களில் தற்போதைய ஆட்சியாளர்களால் அடிப்படை மனித உரிமைகள் பலதரப்பட்ட வடிவத்திலும் தென்னிலங்கையில் மீறப்பட் ஸ்ரீடுள்ளமையை கொழும்பிலுள்ள மனித உரிமைகள் காப்பகம் பட்டியலிட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பித்துள்ளது.*




*எனவே, இன்றைய ஆட்சியாளர்களின் கால்பகுதியல் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களை பட்டியலிடும்போது வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களையும் குறிப்பிட்டுக் காண்பித்திருக்க முடியும். இதன்மூலம் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு மேலும் வலுச்சேர்த்திருக்க முடியும். ஆனால், அவ்வாறில்லாமல் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற குறிப்பாக தென்னிலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களை மட்டுமே சுட்டிக்காட்டியிருப்பதன் மூலம் கொழும்பிலுள்ள மனித உரிமைகள் காப்பகம் உரிய வகையில் செயல்படுகின்றதா ? அல்லது பாரபட்சமாக நடந்து கொள்கின்றதா ? என்ற கேள்வியே மேலெழுவதாக இருக்கின்றது.*

*2019ஆம் ஆண்டு ஏப்ரலில் முழு நாட்டையுமே உலுப்பிவிட்டிருந்த உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பின்னர் இடம்பெற்ற கண்மூடித்தனமான கைதுகள், மற்றும் தடுப்புக்காவல்கள் என்பவை குறித்தும் , உயிர்த்த ஞாயிறு தினக்குண்டு வெடிப்பின் பின்னர் முஸ்லிம் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டமை குறித்தும் மனித உரிமைகள் காப்பகம் குறிப்பிட்டுள்ளதோடு பயங்கரவாத தடுப்புச்சட்டம் நீக்கப்படாதிருப்பது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளது.*

*ஆனால், தற்போது தென்னிலங்கையில் இடம்பெறுவதாக மனித உரிமைகள் காப்பகம் குறிப்பிட்டுள்ளவை அனைத்துமே மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அப்பட்டமான முறையில் பல தரப்பட்ட வடிவிலும் வடக்கு - கிழக்கில் மனித உரிமைகள் மீறல்களாக இடம்பெற்றிருந்தன. அப்போது அவை குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்காது மௌனம் காத்து தென்னிலங்கை அரச தரப்பின் மகுடிக்கு கட்டுப்பட்டிருந்தது. ஆனால், தற்போது இலங்கையின் மனித உரிமைகள் காப்பகம் 135ஆவது ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடருக்கு தென்னிலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து அறிக்கையிட்டுள்ளவற்றை நோக்கும்போது இலங்கையின் மனித உரிமைகள் காப்பகம் நம்பத்தகுந்ததா ? என்ற கேள்வியே எழுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

ஜூன் - 04 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 21
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பஞ்சமி




**மேடம்**
செயல்களில் வெற்றி காண்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.நல்ல தகவல் வரும். முயற்சிகளில் இழுபறி உண்டாகும்.மனம் தடுமாறும். தேவையில்லாத சிந்தனைகள் மேலோங்கும்.

**இடபம்**
எதிர்பார்த்தவற்றில் வெற்றி காண்பீர்கள்.சிரமங்கள் இன்று விலகும். முயற்சிகள் வெற்றியாகும்.வேகமாக செயல்பட்டு எண்ணியதை அடைவீர்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்**
சிந்தித்து செயல்படுங்கள்.தொழிலில் லாபம் ஓரளவே இருக்கும். புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பது நல்லது.குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். மனதில் குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு.

**கடகம்**
முயற்சிகள் வெற்றியடைவதால் நிம்மதி உண்டாகும். குருவருளால் நினைப்பது நிறைவேறும். திறமைகள் வெளிப்படும். பேச்சாற்றலால் வழக்கு வெற்றியாகும். உங்கள் செல்வாக்கு உயரும்.

**சிம்மம்**
குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். மனை, வாகனம் வாங்கும் முயற்சியில் சிலர் ஈடுபடுவர்.சந்தோஷம், நிம்மதி என உங்கள் எண்ணம் செல்லும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.

**கன்னி**
எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும்.தொழிலில் எதிர்பாராத லாபம் உண்டாகும். குடும்பத்தினரின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**துலாம்**
குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். மறைமுகத் தொல்லைகள் கொடுத்தவர்கள் விலகிச் செல்வார்கள். செல்வாக்கு உயரும்.செயலில் தெளிவு இருக்கும். திட்டமிட்டு செயல்பட்டு செயலில் வெற்றி காண்பீர்கள்.

**விருட்சிகம்**
மனதில் ஏற்பட்ட குழப்பம் மறையும். சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். யோகமான நாள். தொல்லை விலகி நன்மை காண்பீர்கள். முயற்சியில் இருந்த தடை விலகும். முன்னேற்றமான நாள்.

**தனுசு**
செயல்களில் இன்று குழப்பம் ஏற்படும். நீங்கள் எதிர்பார்த்த ஒன்றில் இழுபறி உண்டாகும்.பழைய பிரச்னை ஒன்று மீண்டும் தலையெடுக்கும். சங்கடத்திற்கு ஆளாகலாம்.பயணத்தில் தடை உண்டாகும்

**மகரம்**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும்.எதிர்பார்த்திருந்த ஒன்று இன்று கிடைக்கும்.கணவன் மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் விலகும்.

**கும்பம்**
தடைகளை சரி செய்வீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.எதிரிகளால் உண்டான சங்கடங்கள் விலகும். முயற்சி வெற்றி பெறும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

**மீனம்**
வேலையில் நெருக்கடி நீடித்தாலும் எதிர்பார்த்தவற்றில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணவரவு உண்டு. பிள்ளைகள்வழியில் செலவு கூடும். பணியாளர்கள் மாற்றுப்பணிக்கு செல்ல நேரிடலாம்.பணியில் தொய்வு ஏற்படலாம்.

# ஈழத் தமிழர்கள் வதைபடும் சிறப்பு முகாம்களை மூடுக!

## நாம் தமிழர் சீமான் வலியுறுத்து

திருச்சி, ஜூன் 04

“தமிழத்தில் சிறப்பு முகாம் என்ற சித்ரவதை முகாம்களை மூடுங்கள், கியூ பிரிவை கலைத்து விடுங்கள்” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.



திருச்சி நீதிமன்ற வளாகத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் கூறியவை வருமாறு,

“பேரறிவாளன் விடுதலையை யார் கொண்டாடியது? கொண்டாடியிருந்தால் என் தம்பி விடுதலையை நான்தான் கொண்டாடியிருக்க வேண்டும். பேரறிவாளன் நிரபாரதி இல்லை என்று கூறும் அண்ணாமலை, அமித் ஷாவுக்கும், மோடிக்கும் குஜராத் கலவரத்தில் தொடர்பு இல்லை என்று இந்த நாட்டின் நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பை எப்படி பார்க்கிறார்?

ஒரு மாநிலத்தின் முதல்வர், சட்டம் - ஒழுங்கை கையில் வைத்திருக்கக் கூடியவர், அவருக்கு தெரியாமல், ஒரு மாதத்துக்கும் மேலாக கலவரம் நடந்திடுமா? வயிற்றைக் கீறி குழந்தையைத் தூக்கி நெருப்பில் வீசுவது எல்லாம் சாத்தியப்பட்டுவிடுமா? பல ஆயிரக் கணக்கான இஸ்லாமிய மக்களை கொன்று குவித்தது, மோடிக்கும் அமித்ஷாவுக்கும் தெரியாமலேயே நடந்துவிட்டதா? இவர்களை விடுதலை செய்தால் நிரபராதி, பேரறிவாளனை விடுதலை செய்தால் அவர் குற்றவாளியா?

தமிழகத்தில் கியூ பிரிவென்று ஒன்றும், சிறப்பு முகாமென்று ஒன்றும் உருவாக்கப்பட்டதே ஈழத் தமிழர்களுக்காகத்தான். அதை உருவாக்கியவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி தான். அவர் உருவாக்கியதை நீங்களாவது முடிவுக்குக் கொண்டு வாருங்கள் என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிடம் முறையிட்டு பார்த்தோம். அது நடக்கவில்லை. தற்போதுள்ள முதல்வர் ஸ்டாலினிடம் இதைத்தான் கேட்கிறோம், “ஈழத் தமிழர்களுக்காக எதையும் செய்ய வேண்டாம்.

முதலில் இந்த சிறப்பு முகாம் என்ற சித்ரவதை முகாம்களை மூடுங்கள், கியூ பிரிவை கலைத்து விடுங்கள். தமிழக முதல்வருக்கு தற்போதும் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். சிங்களவர்கள் சிறையில் அடைபட்டு வதைபடுவதற்கு இணையாக தமிழகத்தில் ஈழத்தமிழர்கள் வதைபடுகின்றனர்”, என்றார். (ஐ)

# கருணாநிதியின் பிறந்தநாள் அரச விழாவாக கொண்டாட்டம்!

சென்னை, ஜூன் 04

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 99ஆவது பிறந்த நாள், முதன் முறையாக அரசு விழாவாக நேற்றுக் கொண்டாடப்பட்டது.




இதையொட்டி, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள கருணாநிதியின் சிலைக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கருணாநிதி உருவப்படத்துக்கும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

முன்னதாக, முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பெருமை சேர்க்கும் வகையில், அவரது பிறந்த நாளான ஜூன் 3ஆம் திகதி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்றும் அவரின் உருவச்சிலை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் நிறுவப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தார்.

இதன்படி, கடந்த மே 28ஆம் திகதி, குடியரசு துணைத்தலைவர் வெங்கையா நாயுடுவால் கருணாநிதியின் சிலை திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்று கட்சி தொடங்குபவர்கள் நான்தான் முதல்வர் என்கிறார்கள்!

## மு. க. ஸ்டாலின்

சென்னை, ஜூன் 04

“தமிழகத்தில் இன்று கட்சித் தொடங்குகிறவர்கள் எல்லாம், அடுத்து நான்தான் முதல்வர் என்றுக் கூறிக் கொண்டு கட்சி தொடங்குகின்றனர்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி பிறந்த நாளையொட்டி நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்தநாள் பெயருக்காக கொண்டாடப்படும் விழா அல்ல. அவர் முதல்வராக இருந்தாலும், எதிர்கட்சித் தலைவராக இருந்தாலும், அவருடைய பிறந்தநாள் நாட்டு மக்களுக்காக கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு பிறந்தநாளையும் மறைந்த முதல்வர் கருணாநிதி மக்களுக்காக பயன்படுத்தினார். இன்று கை ரிக்ஷாக்களை எங்கேயுமே பார்க்க முடியாது. கம்யூனிச சித்தாந்தத்தைப் பேசிக்கொண்டிருக்கிற மேற்கு வங்கத்தில்கூட கை ரிக்ஷாக்கள் உள்ளன. ஆனால், தமிழகத்தில் கை ரிக்ஷாக்கள் இல்லை என்றால், அதற்கு காரணம் முன்னாள் முதல்வர் கருணாநிதிதான்.

தன்னுடைய பிறந்தநாளை தனக்காக கொண்டாடமல், நாட்டு மக்களுக்காக, ஏழை - எளியவர்களுக்காக கொண்டாடிய தலைவர்தான் முன்னாள் முதல்வர் கருணாநிதி.

1949இல் திமுக தொடங்கப்பட்டது. கட்சியைத் தொடங்கும்போதே நான்தான் முதல்வர் என்றுகூறிக் கொண்டு வரவில்லை பேரறிஞர் அண்ணா. ஆனால், இன்று கட்சி தொடங்குகிறவர்கள் எல்லாம், அடுத்து நான்தான் முதல்வர் என்றுக் கூறிக் கொண்டு கட்சி தொடங்குவதை பார்க்கிறோம்” என்று அவர் பேசினார். (ஐ)

# அமைச்சுப் பதவி அழைப்பை அடியோடு நிராகரித்த ராஜித!

## கோட்டாபய பதவி விலகும்வரை அது சாத்தியமில்லை என தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 04**


**சர்வகட்சி அரசில் இணைந்து, அமைச்சுப் பதவியை ஏற்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன நிராகித்துள்ளார்.**

அவருக்கு சுகாதார அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷகூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இணக்கம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ராஜிதவுக்கும் தூது அனுப்பப்பட்டது.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும்வரை, இது சாத்தியப்படாது எனவும், இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைத் தான் மதிப்பதாகவும் ராஜித சேனாரத்ன எம்.பி., சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் இம்முறை ராஜித சேனாரத்ன கடும் தொனியிலேயே கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

"ஒழுக்காற்று நடவடிக்கை என்பது நகைச்சுவையாக மாறியுள்ளது. டயானா கமகேவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அவர் பிரிட்டன் பிரஜை. இதை நிரூபித்தால் எம்.பி. பதவியைக் கூடப் பறித்துவிடலாம். ஆனால், இதனை கட்சி செய்ய வில்லை. அதனால்தான் டயானா கமகே, எல்லா விட யங்களிலும் கட்சியை விமர் சித்து வருகின்றார். ஹரின், மனுஷ ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், டயானா விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்" என்று ராஜித இடித்துரைத்துள்ளார். (அ)




## கோட்டா கோ கமவிலிருந்து யாழ். நூலகத்துக்கு நூல்கள்!

கொழும்பு, ஜூன் 04

ஆசியாவின் மிகப் பெரிய நூலகமான யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டு 41 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் கொழும்பு காலிமுகத்திடலில் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கோட்டா கோ கம போராட்டக்காரர்களால் நேற்று யாழ். நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டு 41 ஆண்டு நிறைவை ஒட்டி கோட்ட கோ கமவில் கவனயீர்ப்பு நிகழ்வு கடந்த முதலாம் திகதி போராட்டக்காரர்களால் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து நல்லெண்ண அடிப்படையில் நூல்கள் அன் பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (அ)

## மரத்திலிருந்து விழுந்து மாணவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 04

பொகவந்தலாவ மவெலி வனப்பகுதிக்கு தனது தந்தையுடன் விறகு சேகரிக்கச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் மரத்திலிருந்து வழுக்கி விழுந்தில் உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலையில் இடம்பெற்ற தாக பொலிஸார் மேலும் கூறி னர்.

குறித்த சிறுவன் மரத்திலிருந்து தவறி விழுந்ததை சிறுவனின் தந்தை தோட்ட மக்களுக்கு அறிவித்ததை அடுத்து சிறுவன் பொகவந்தலாவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது இடைவழியில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொகவந்தலாவ சென். விஜயன்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 16 வயதுடைய சுரேந்திரகுமார் அபிஷாந்த் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

பொகவந்தலாவ பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## பாணந்துறையில் துப்பாக்கி சூடு: ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 04

பாணந்துறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை நிர்மல மாவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## மஹிந்த கஹந்தகமவுக்கு 8 ஆம் திகதி வரை மறியல்!

கொழும்பு, ஜூன் 04

மே மாதம் 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மஹிந்த கஹந்தகமவை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் சந்தேகநபராக பெயரிடப்பட்டிருந்த அவர், நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜரான நிலையில் கைது செய்யப்பட்டார். (அ)

## தனிநபருக்கு 50 மில்லியன் டொலர் மிளகாய் ஏற்றுமதி செய்ய அனுமதி

கொழும்பு, ஜூன் 04

தனிநபர் ஒருவருக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மிளகாய் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தங்களுக்காக ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் டொலரில் தனிப்பட்ட நபர் ஒருவ ருக்கு, 10 சதவீதத்தை வழங்கியமையானது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஒன்றாகும் எனத் தாம் கருதுவதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் கே.இளமைநாதன் தெரிவித்துள்ளார்.

தங்களது வியாபார சங்கத்தில் சுமார் 400 வர்த்தகர்கள் இதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## வவுனியாவில் காணாமற்போன இளைஞர் வீட்டுக்கு திரும்பினார்

வவுனியா, ஜூன் 04

வவுனியா குருமன்காட்டில் வசித்து வந்த கஜேந்திரன் கிருத்திகன் என்ற இளைஞன் கடந்த சில தினங்களாக காணாமல் போய்விட்டதாக அவரது உறவினர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மேற்கொண்டனர்.

எனினும் நேற்றுமுன்தினம் மாலை குறித்த இளைஞர் வீடு திரும்பியுள்ளதாகவும் வீட்டில் ஏற்பட்ட முரண்பாட்டினால் யாழ்ப்பாணத்திலுள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்கு ஒருவரிடமும் சொல்லாமல் சென்றுவிட்டதாகவும் தற்போது காணாமல் போய்விட்டதாகச் செய்திகள் பரவியதை அடுத்து மீண்டும் திரும்பி வந்துவிட்டார் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த இளைஞனை நேற்றுக் காலை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை மீளப் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## சப்புகஸ்கந்தை எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் சுத்திகரிப்பு ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 04

சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் சுத்திகரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தற்போது நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணெய் இருப்பு இல்லாததால், பொதுமக்கள் வரிசையில் காத்திருக்கவேண்டாம் என்றும் அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். அத்துடன் இன்னும் சில நாட்களில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய முடியும் என அந்த நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## எரிவாயு வழங்குமாறு ஹற்றனில் மக்கள் வீதி மறியல் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 04

ஐந்து மாதங்களாக சமையல் எரிவாயு இன்றி தாம் பரிதவிப்பதாகவும், எனவே, தங்களுக்கு கூடியவிரைவில் சமையல் எரிவாயுவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தியும் நோர்வூட், புளியாவத்தை கடை வீதியில் வசிக்கும் மக்கள் நேற்று போராட்டத்தில் குதித்தனர்.

ஹற்றன் - சாஞ்சிமலை பிரதான வீதியை மறித்து, வீதி நடுவே வெற்று சமையல் எரிவாயு சிலிண்டர்களை அடுக்கி வைத்து, பதாகைகளைத் தாங்கியும், கோஷங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் அவ்வீதி ஊடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. ஹற்றனில் இருந்து சாஞ்சிமலை, பொகவந்தலாவை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு வந்த மக்கள் நீண்ட நேரம் வாகனங்களில் காத்திருந்தனர். பலர் மாற்று வழிகளைத் தேடி திரும்பி சென்றனர். பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.




நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நோர்வூட் பொலிஸார் முற்பட்டனர். எதிர்வரும் 8ஆம் திகதிக்குப் பின்னர் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. போக்குவரத்து நடவடிக்கையும் வழமைக்குத் திரும்பியது. (அ)

# கோவிட் நிதியத்திடம் ரூ.1.8 பில்லியன் கோருகிறார் ஜனாதிபதி கோட்டாபய!

## அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு



**கொழும்பு, ஜூன் 04**

**அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக 1.8 பில்லியன் ரூபாவை வழங்குமாறு கோவிட் நிதியத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.**

சுகாதாரத்துறையில் உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கோவிட் தொற்று தற்போது கட்டுக்குள் உள்ளதால், சுகாதாரத் தேவைகளுக்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

உலக சந்தையில் மருந்துப் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால், உள்நாட்டில் மருந்து உற்பத்தியை துரிதப்படுத்தி, தேவையான மூலப்பொருட்களை இந்திய கடன் உதவியின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார். (அ)



# விதைப்பொதி, பயன்தரு மரக்கன்று வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஜூன் 04

விதைப்பொதிகள், பயன்தரு மரக் கன்றுகள் மற்றும் இயற்கை உரப்பொதிகள் என்பனவற்றை அரச உத்தியாகத்தர்களுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு விதைப் பொதிகளையும் பயன்தரு மரக்கன்றுகளையும் சம்பிரதாயபூர்வமாக வழங்கினர்.

நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு வீட்டில் தோட்டங்களை உருவாக்கி அதன் மூலம் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் இந்த விதைப் பொதிகள் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (அ)

## அமரகீர்த்தி எம்.பி. கொலை; மேலும் இரண்டு பேர் கைது!

கொழும்பு, ஜூன் 04

அமரகீர்த்தி அத்துக்கோரள எம்.பியின் கொலை வழக்கு தொடர்பாக மேலும் 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தம் 21 சந்தேகநபர்கள் இதுவரை கைதாகியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# சொத்து குவிப்பு வழக்கிலிருந்து பஸில், திருக்குமார் விடுதலை!

கொழும்பு, ஜூன் 04

மல்வானை சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோர் கம்பஹா மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தொம்பே, மல்வானையில் காணி ஒன்றை கொள்வனவு செய்து ஆடம்பர வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கின் முதலாம் பிரதிவாதியான பஸில்ல் ராஜபக்ஷ, 16 ஏக்கர் காணியை கொள்வனவு செய்வதற்கும், ஆடம்பர வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கும் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமைக்காக சட்டமா அதிபரால் மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந் தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்காவிட்டால் உணவுத்தட்டுப்பாடு விரைவில் உக்கிரமடையும்

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 04

விவசாயிகள் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கும் நீர் பாய்ச்சுவதற்கும் எரிபொருள் இன்றித் திண்டாடி வருகின்றனர். இதனால்இ ஏராளமான விவசாயிகள் சிறுபோகச் செய்கையைக் கைவிட்டுள்ளனர். இவர்களுக்கு வேண்டிய டீசலையும் மண்ணெண்ணெயையும் தடையின்றிப் பெற்றுக்கொடுக்க அரச உயர் அதிகாரிகள் உடனடியாக ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து எரிபொருள் வழங்காவிடின் உணவுத்தட்டுப்பாடு விரைவில் உக்கிரமடையும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

விவசாயிகள் எரிபொருட்களைப் பெறுவதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசின் தவறான நிதித் திட்டமிடுதலினாலும் தவறான விவசாயக் கொள்கையினாலும் நாடு உணவு உற்பத்தியில் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு மோசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. கடந்த பெரும்போகம் எதிர்பார்த்த அறுவடையைத் தராத நிலையில்இ சிறுபோக விளைச்சலும் 50 வீதமாகக் குறைவடையும் அபாயம் நேர்ந்துள்ளது. உணவுத் தானியங்களின் இறக்குமதிக்கும் அரச கருவூலத்தில் பணம் இல்லாததால் நாடு மிகப்பெரும் உணவுப் பஞ்சத்தை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.



நாடு பட்டினியை எதிர்நோக்கியுள்ள நிலையிலுங்கூட உணவுற்பத்தியில் அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இதுவரையில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களில் குறுகிய காலப் பயிர்களான சிறுதானியங்களினதும் அவரை இனப் பயிர்களினதும் செய்கையை ஊக்குவிப்பது அவசியமாகும். இதற்கு வேண்டிய விதைகள் கையிருப்பில் இருக்கின்றபோதும் உழவுக்கும் இறைப்புக்கும் வேண்டிய எரிபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு இதுவரையில் முன்னுரிமை வழங்கவில்லை.

உணவுற்பத்தியை ஓர் அவசர காலச் செயற்பாடாகக் கருதி விவசாயிகளுக்குத் தடையின்றி எரிபொருள் கிடைக்க வழி செய்யவேண்டும். இதற்கு மாவட்டச் செயலர்களும் பிரதேச செயலர்களும் கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளும் தாமதமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளும் இதற்கான அழுத்தங்களைக் கொடுக்க முன்வரவேண்டும். தவறின் உணவுத்தட்டுப்பாடு மென்மேலும் உக்கிரமடைவதோடு பட்டினிச் சாவுகள் நேர்வதும் தவிர்க்க முடியாததாகிவிடும்-என்றார். (அ)



# சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு மன்னாரில் தூய்மையாக்கல் செயல்பாடு

மன்னார், ஜூன் 04

சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னார் கீரி கடற்கரைப் பகுதியில் கரையோர தூய்மையாக்கல் நடவடிக்கை மற்றும் நிழல் தரும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு கனகாம்பிகை,மன்னார் நகர சபையின் தவிசாளர் எஸ். ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன்,நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிராம அலுவலர் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக மாதர்,கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், கிராம மக்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டு கரையோர தூய்மையாக்கல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

பின்னர் மன்னார் நகர சபையின் உதவியுடன் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டன.

அதனை தொடர்ந்து குறித்த பகுதியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு-கிழக்கில் வனப் பாதுகாப்புத் திணைக்களம் கைப்பற்றிய வயல் காணிகளை விடுவிக்க பணிப்பு

கொழும்பு, ஜூன் 04

வடக்கு - கிழக்கில் வன பாதுகாப்பு திணைக்களம் கைப்பற்றிய வயல் காணிகளை விடுவிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் வன பாதுகாப்பு திணைக்களம் கைப்பற்றிய வயல் காணிகளை உடனடியாக விவசாயிகளுக்கு மீள வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட தரப்புகளால் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மன்னார் சமுர்த்தி கிராமத்தில் இடம்பெற்ற அறுவடை விழா!

மன்னார், ஜூன். 04

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரியமடு கிராமத்தில் சமுர்த்தி உதவித் திட்டத்தின் மூலமும் சுய உழைப்பின் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்த பழ வகைகள் மற்றும் மரக்கறி வகைகள் நேற்று அறுவடை செய்யப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் பழ வகைகளான பப்பாசி , பலாப்பழம் மற்றும் மரக்கறி வகைகளான கத்திரி, மிளகாய் போன்றவற்றின் அறுவடைகளை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது ஆறு மாதத்தில் பலன் தரக்கூடிய மரவள்ளிச் செடிகளும் நாட்டி வைக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி உதவி ஆணையாளர், பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் கலந்துகொண்டனர். (அ)

# வவுனியாவில் விற்பனைக்காக வந்த எரிவாயுவை பதுக்குவதற்கு முயற்சி

## அதிகாரிகளின் தலையீட்டால் விநியோகம்

வவுனியா, ஜூன். 04

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியிலுள்ள எரிவாயுக்கள் விநியோகஸ்தருக்கு வழங்குவதற்கென்று விநியோகிக்கப்பட்ட 20 எரிவாயுக்களையும் விநியோகஸ்தரால் பதுக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

மாவட்ட செயலக அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து காத்திருந்த மக்களுக்கு அந்த எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டன.



வவுனியா பட்டாணிச்சூரில் நேற்று அதிகாலை முதல் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்த மக்களுக்கு வழங்குவதற்கு என்று 20 எரிவாயு சிலிண்டர்கள் எடுத்துவரப்பட்டன. காத்திருந்த மக்களுக்கு வழங்காமல் இழுத்தடிப்புச் செய்து குறித்த எரிவாயுவைப் பதுக்குவதற்கு விநியோகஸ்தரினால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து அங்கு நீண்ட நேரமாக காத்திருந்த மக்கள் மாவட்ட செயலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகளின் தலையீட்டால் காத்திருந்த மக்களுக்கு முற்பகல் 10 மணியளவில் எரிவாயு விநியோகம் செய்யப்பட்டது. (அ)

# நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்வோர் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 04

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்பவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

வணிகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகள் எதிர்நோக்கும் சவால்களுக்கு விரைவான தீர்வுகளை காண்பது தொடர்பான கலந்துரையாடல், கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன் தினம் இடம்பெற்றபோது ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்குமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி சில வர்த்தகர்கள் விலையை அதிகரிக்கச் செய்யும் திட்டமிட்ட முயற்சிகளை இதன் மூலம் தடுக்க முடியும்.

மொத்த சந்தைக்கு விநியோகிக்கப்படும் விவசாய விளைபொருட்களில் ஒரு பகுதியை நேரடியாக கிராம சந்தைக்கும் வழங்கவேண்டும்.

இதன் மூலம் போக்குவரத்துச் செலவு குறைவடைவதனால், கிராமப்புற நுகர்வோர், குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், விவசாயிகள் அதிக விலையை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

நாடளாவிய ரீதியில் இயங்கும் சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை தொடர்ந்து செயற்படுத்துவதன் அவசியம் பற்றியும், வர்த்தகர்களின் விருப்பத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்ய இடமளிக்காமல் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு!

கொழும்பு, ஜூன். 04

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகளை நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சில் வைத்துச் சந்தித்தார்.

அதன்போது, அவசியமான நேரத்தில் தமது முழுமையான உதவிகளை வழங்குமாறு இராஜதந்திரிகளிடம் வெளிவிகார அமைச்சர் கோரியுள்ளார்.

இலங்கையில் நிலவும் நிலைமை மற்றும் எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் மின்வெட்டு போன்ற அழுத்தமான பிரச்சனைகளை உள்ளடக்கிய அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்களை



அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான நிலைமையை நிவர்த்தி செய்வ தற்கு அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்த வெளிவிவகார அமைச்சர், தேவைப்படும் நேரத்தில் தமது முழுமையான உதவிகளை வழங்குமாறு தூதுவர்களை கேட்டுக்கொண்டார். (அ)

# ஒடுக்கப்படும் தமிழ் கட்சிகளை மிகுந்த நட்போடு அணுகுங்கள்!

## போராட்டக்காரர்களிடம் மனோ கோரிக்கை



கொழும்பு, ஜூன். 04

“இந்நாட்டில் ஜனாதிபதியாக. பிரதமராக நாம் துடிதுடிக்கவில்லை. அப்படி துடியாய் துடிக்கும் பெருங் கட்சிகளை ஒரு கூடையில் போடுங்கள். எம்மை போன்ற ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் முற்போக்கு கட்சிகளை வேறு விதமாக பாருங்கள். இந்நாட்டில் ஜனாதிபதியாக. பிரதமராக எமக்கு தகுதி இல்லாமல் இல்லை. அவை நிச்சயமாக எமக்கு இருக்கின்றன. ஆனால், நாம் பேரினவாதத்தால் ஒடுக்கப்பட்டுள்ள எமது மக்களை விடுவிக்கவே இன்று துடிக்கிறோம்.” என தமிழ் முற்போக்கு கூட்டணியை சந்தித்த போராட்டக்கள அனைத்து கட்சி போராளிகள் குழுவிடம் மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி- அனைத்து கட்சி போராளிகள் குழு சந்திப்பு, நேற்று கூட்டணி தலைவர் மனோ கணேசன் இல்லத்தில் நிகழ்ந்தது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரமும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

இதுபற்றி மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:

தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், காலிமுகதிடல், “அனைத்து கட்சி போராளிகள்” தூதுக்குழுவினக்கும் இடையில் எனது இல்லத்தில் நிகழ்ந்தது. இந்த சந்திப்பில் திகாம்பரம் எம்பியும் கலந்துக்கொண்டார். அனைத்து கட்சி போராளிகள்” சார்பில், விபீதக பொத்துவகே, நிராஷான் விதானகே, மனிஷ் கலப்பத்தி, கெலும் அமரதுங்க ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் நடைபெற்ற பேச்சுகளின்போது, தொடர்ந்து பரஸ்பர தொடர்புகளை பேணி செயற்படுவது என்று முடிவானது. மலையக மக்கள், இலங்கை தேசிய தளத்தில் உள்வாங்கப்படுவது தொடர்பான, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மலையக அபிலாஷை ஆவணமும் அனைத்து கட்சி போராளிகளுக்கு வழங்கப்பட்டது.

இவர்களிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் நான் எடுத்து கூறியது, தம்பி, நாட்டில் ஜனாதிபதி, பிரதமர் ஆக வேண்டும் என துடியாய் துடிக்கும் பெருங் கட்சிகளை ஒரு கூடையில் போடுங்கள். எம்மை போன்ற ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் முற்போக்கு கட்சிகளை வேறு விதமாக பாருங்கள்.

தமிழர்களாகிய எங்களுக்கு இந்த உணவு இல்லை, மின்சாரம் இல்லை என்பவை பழகிப்போன பிரச்னைகள். போர் காலத்தில் பல்லாண்டுகளாக தமிழ் மக்கள் இப்படி வாழ்ந்தார்கள். மலை நாட்டில் போர் இல்லாமலேயே நம் மக்கள் தோட்ட சிறைகளுக்குள் இப்படிதான் வாழ்கிறார்கள்.

கலவர காலங்களில் எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டன. எம் மக்கள் கொல்லப்பட்டார்கள். ஆகவே இவை எமக்கு சகஜம். ஆகவே புதிய இலங்கையை உருவாக்குவோம். இவை அனைத்திற்கும் தீர்வு தேடுவோம். மாற்றத்தை கொண்டு வர சொல்லிவிட்டு, நீங்கள் ஓரமாய் ஒதுங்கி நிற்காதீர்கள். அந்த தேடலில் நீங்களும் நேரடியாக பங்களியுங்கள். அந்த தீர்வு உணவு, மின்சாரம், எரிவாயு ஆகியவற்றுக்கு அப்பால் இருக்க வேண்டும்.

மலையக தமிழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தோட்டங்களில் பின்தங்கி வாழ்கின்றனர். அவர்களை தேசிய தளத்தில் உள்வாங்க அரசு இயந்திரத்தில் பெரும் தயக்கம் காணப்படுகிறது. அதை நாம் முறியடிப்போம். நீங்களும் உதவ வேண்டும்.

இவற்றுக்கு, அனைத்து கட்சி போராளிகள் சார்பில் பதிலளித்த பேச்சாளர் கெலும் அமரதுங்க கூறியதாவது, “நாம் உங்களை தேடி வந்து சந்தித்தமைக்கு காரணம் உண்டு. ஏனைய தமிழ், முஸ்லிம் கட்சிகளையும், ஜன நாயக கட்சிகளையும் நாம் சந்திக்கிறோம். இன்று விலகி போக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரம சிங்கவின் உள்நுழைவால் கொஞ்சம் மூச்சு வாங்குகிறார். மாற்றத்துக்காக எம்மை நேரடியாக பங்களிக்கும்படி இதுவரை யாரும் கூறவில்லை. நீங்கள்தான் திறந்த மனதுடன் அதை கூறுகிறீர்கள். உங்களுடன் தொடர்புகளை பேண விரும்புகிறோம். மலையக தமிழ் மக்களையும் நாம் சரிசமமாக கவனத்தில் எடுப்போம் - என்றார்.

# ஏழு தசாப்தங்களின் தலைவன்

## ‘கருணாநிதியின் அனுபவமும் அறிவும் நாட்டை நிர்வகிப்பதில் எமக்கு அதிர்ஷ்டமானது’ - மன்மோகன் சிங்

**தங்கவேல் அப்பாச்சி**
*ஆசிரியர், பிபிசி தமிழ்*

### கலைஞர் மு. கருணாநிதியின் 98 ஆவது பிறந்த நாள் நேற்று

ஒரு முறை சென்னையில் உலகின் மிகப் பெரும் பணக்காரராக இருந்த மைக்ரோசொப்ற் நிறுவனர் பில் கேட்ஸ் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்தார். அந்த சந்திப்புக்குப் பிறகு, உலகிலேயே மிகவும் பணக்கார மனிதர் அவரை வீடு தேடி வந்து சந்தித்தது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

“என்னிடம் கொஞ்சம் கடன் வாங்குவதற்காக அவர் வந்தார்” என்று கருணாநிதி உடனடியாக பதிலளித்தார்.

தனது பொது வாழ்க்கை முழுமைக்கும் கருணாநிதி கொண்டிருந்த தன்னம்பிக்கையின் அளவு இது.

பிரிட்டிஷ் இந்தியாவில் பிறந்து, தமிழ்நாட்டை ஐந்து முறை ஆட்சி செய்த கருணாநிதி, தாம் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களில் ஒன்றில்கூட தோல்வியடைந்ததில்லை. ஏழு தசாப்தங்கள் பொது வாழ்வில் பங்களித்த மிகச்சில அரசியல் தலைவர்களில் கருணாநிதியும் ஒருவர்.

இரண்டு ஆயுதங்களைக் கொண்டுதான் அவர் அரசியலில் நுழைந்தார். ஒன்று அவரது பேச்சுத் திறமை, இன்னொன்று எழுத்துத் திறமை. அப்போது அவரிடம் பண பலமும் இல்லை, அதிக படிப்பும் இல்லை.

கருணாநிதிக்கு முன்பு திமுகவின் முன்னணி தலைவர்களாக இருந்த அண்ணாதுரை, மதியழகன் உள்ளிட்டோர் அப்போதே முதுகலை பட்டம் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால், பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய கருணாநிதி, அவர்களைவிட அதிக நூல்களை எழுதினார். எழுத்து மீதான அவரது தீராக் காதல் அவரை பல உயரங்களுக்கு அழைத்துச் சென்றது.

17 வயதிலேயே இந்தித் திணிப்புக்கு எதிராக மாணவர்களை ஒன்று திரட்டிய கருணாநிதி, தமிழ்நாடு மாணவர் மன்றம் என்ற மாணவர் அமைப்பைத் தொடங்கினார்.

கருணாநிதி தனது அரசியல் ஆசானான அண்ணாவை 1940களில் சந்தித்தார். பெரியாருடன் உண்டான கருத்து வேறுபாட்டால், திமுக எனும் புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியபோது, அண்ணாவுக்கு நெருக்கமான, நம்பிக்கைக்குரிய தளபதியானார். கட்சியின் பிரசாரக் குழுவின் உறுப்பினராக மட்டுமல்லாது, கட்சியின் முக்கிய சக்தியாகவும் திகழ்ந்தார்.

சுதந்திர இந்தியாவில் நடைபெற்ற முதல் தேர்தல் 1952இல் நடந்தபோது, அதில் திமுக பங்கேற்கவில்லையென்றாலும், தவிர்க்க முடியாத தலைவராகவே கருணாநிதி இருந்தார். 1967 தேர்தலில் வென்று திமுக ஆட்சியமைத்தபோது, கருணாநிதி ஏற்கனவே 10 ஆண்டு கால சட்டமன்ற அனுபவம் உள்ளவராகத் திகழ்ந்தார்.

1969இல் அண்ணாவின் மறைவுக்கு பிறகு முதலமைச்சராக பொறுப்பேற்ற கருணாநிதி, சந்தை மற்றும் சமூக நலன் ஆகியவற்றை ஒருங்கிணைத்த தொலைநோக்கைக் கொண்டிருந்தார்.

தமிழ்நாடு தொழில்துறையில் முன்னேற வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால், அதற்கு சாமானியர்களின் நலனை விலையாகக் கொடுக்கவில்லை.

சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் மட்டுமே செயல்பட்டு வந்த பொது விநியோகத் திட்டத்தை அவர் மாநிலம் முழுமைக்கும் பரவலாக்கினார். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தியதன்மூலம், தமிழகத்தில் பட்டினிச்சாவு இல்லாத ஒரு சூழலை உறுதிசெய்தார்.

அவரது அனைத்து செயல்பாடுகளுக்கும் சமூக நீதியே அடித்தளமாக இருந்தது என்கிறார் மூத்த ஊடகவியலாளர் ஏ. எஸ். பன்னீர்செல்வம்.

தேசிய அரசியலுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தாலும், தேசிய அரசியலில் தமக்கென ஓர் இடத்தைப் பிடிக்க அவர் எப்போதுமே முயன்றதில்லை. தமக்கு பிரதமராவதற்கான சூழல் வந்தபோதும், அப்பதவிக்கு அவர் பிறரையே தேர்வு செய்தார். பிரதமர் பதவி குறித்த கேள்வி எழுப்பப்பட்டபோதெல்லாம், ‘என் உயரம் எனக்குத் தெரியும்’ என்று அவரே பல தருணங்களில் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

1969இல் காங்கிரஸ் கட்சி ஸ்தாபன காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என பிளவு பட்டபோது, தன் வசம்



25 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த அவர் இந்திரா காந்தியின் பக்கம் நின்றார். அதே ஆண்டு சில மாதங்களுக்கு முன்பு அண்ணாதுரை மறைவுக்குப் பிறகு முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்ட கருணாநிதி குறித்து பேசிய இந்திரா, ‘அவர் ஒரு மோதல் போக்குடையவர் என்று கேள்விப்பட்டேன்’ என்று கூறி இருந்தார். அந்த மோதல் போக்குடையவர்தான் இந்திராவைக் காப்பாற்ற வந்தார்.

கட்சியின் அதிகார பூர்வ வேட்பாளருக்கு எதிராக தமது சொந்த வேட்பாளரை, 1969 குடியரசுத் தலைவர் தேர்தலில் இந்திரா களமிறக்கினார். அப்போதும் கருணாநிதி இந்திரா காந்திக்கு ஆதரவளித்தார்.

மத்தியில் அரசு நிலையாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினாலும், ஒரே இடத்தில் அதிகாரம் குவிக்கப்படுவதை கடுமையாக எதிர்த்தார்.

ராஜிவ் காந்தியிடம் இருந்து விலகி வந்தபின், தேசிய முன்னணி அரசை வி. பி. சிங் அமைத்தபோது, ஆட்சியமைப்பதில் கருணாநிதி முக்கியப் பங்காற்றினார். தமிழக நலன்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்த காவிரி நடுவர் மன்றம், இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படையை திரும்ப அழைத்தல் மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்கிய மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துதல் ஆகியவற்றை அப்போது கருணாநிதி உறுதி செய்தார்.

வி. பி. சிங் பதவி விலகிய பின்னும், தேவ கௌடா மற்றும் ஐ. கே. குஜ்ரால் ஆகியோரை பிரதமராகத் தேர்வு செய்வதில் முக்கிய பங்காற்றினார்.

மதவாத சக்திகளுக்கு எதிராக போரிடுபவராக மட்டுமே அறியப்பட்ட கருணாநிதி, 1999இல் பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைத்து நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார். ஆனால், ராமர் கோயில் விவகாரத்தை கையில் எடுக்க மாட்டோம் எனும் உத்தரவாதத்தை பாரதிய ஜனதாவிடம் வாங்கிக்கொண்டார். தங்கள் அரசியலின் முக்கிய நோக்கமாக இருக்கும் ஒன்றைச் செய்யமாட்டோம் என்று ஒரு தேசிய கட்சி மாநில கட்சி ஒன்றிடம் உத்தரவாதம் அளிப்பது வழக்கத்துக்கு மாறானது.

ராமர் எனும் கடவுள் இருந்ததே இல்லை. அது ஒரு புராணக் கதை மட்டுமே என்றும் கூறி, கருணாநிதி பாரதிய ஜனதா மற்றும் அதை ஆதரிக்கும் வலதுசாரி அமைப்பினரின் கோபத்துக்கு உள்ளானார்.

முதலமைச்சர் போன்ற ஓர் உயரிய அரசியல் சாசன பொறுப்பில் அமர்ந்துகொண்டு, ராமர் குறித்து அவர் அவ்வாறு கூறியிருக்கக்கூடாது என்று எல். கே. அத்வானி கண்டித்தார். ஆனால், கருணாநிதி தன் கூற்றுக்கு ஆதரவாக நேரு கூறியதை சுட்டிக்காட்டினார்.

‘திராவிடர்கள்மீது தங்கள் மேலாதிக்கத்தை செலுத்துவதற்காக இட்டுக்கட்டப்பட்ட கதையே ராமாயணம் என்று கூறிய ஜவாஹர்லால் நேருவைவிடவும், ராமரைக் காக்க வருபவர்கள் ஒன்றும் பெரியவர்கள் அல்லர்’ என்று கருணாநிதி அப்போது கூறினார்.

**குளித்தலை முதல் திருவாரூர் வரை. - தோல்வியே சந்திக்காத கருணாநிதி**

2001ஆம் ஆண்டு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பேசியபோது, தாம் ஏன் அக்கூட்டணியில் சேர்ந்தோம் என்று கருணாநிதி கூறினார். “வாஜ் பாய் உடனான நட்பில் வெல்வதற்காக இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், திரிணாமுல் காங்கிரஸ் போன்ற கட்சிகளில் இருக்கும் நண்பர்களை நான் இழக்க வேண்டியுள்ளது என்றால் அதற்கு காரணம் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட நாங்கள் 1975 இல் ஒன்றாகப் போராடிய அவசர நிலை நாட்களில் இருந்தே நாங்கள் நட்பில் உள்ளோம்,” என்றார் கருணாநிதி. “எனக்கு பாரதிய கட்சியைவிட அதன் தலைமை பொறுப்பில் யார் உள்ளார்கள் என்பதே முக்கியம்.”

2003இல் திமுக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகியது. வாஜ்பாயைப்போல அத்வானி தமிழர்களுக்கு அனுசரணையாக இல்லை என்று அப்போது கூறினார்.

பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தியவராக இருந்தாலும், தம் திறமைகள் குறித்து எப்போதுமே அவர் குறைவாக நினைத்ததில்லை. இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாக இல்லாதபோதும் தேசியத் தலைவர்களுடன் மிகவும் மிடுக்குடன் நடந்து கொண்டார். அவர்கள் அரசியலில் தாக்குப்பிடிக்க தாம் மிகவும் முக்கியம் என்பதை அவர்களுக்கு உணர்த்தினார்.

பாஜகவிடம் இருந்து விலகியதும் காங்கிரஸ் கட்சியுடன் இணக்கத்துடன் நெருங்கி, காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அமைவதில் முக்கிய பங்காற்றினார்.

சோனியா காந்தி மற்றும் மன்மோகன் சிங் ஆகியோர், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் அறிவுரை வேண்டி அடிக்கடி கருணாநிதியை நாடியுள்ளதாக பல முறை வெளிப்படையாக தெரிவித்துள்ளனர்.

“அவர் அரை நூற்றாண்டு காலமாக பொது வாழ்வில் உள்ளார். அவரது அனுபவமும் அறிவும் நாட்டை நிர்வகிப்பதில் உதவுவது எங்களுக்கு மிகவும் அதிர்ஷ்டவசமானது,” என்று மன்மோகன் சிங் கூறினார்.

2014இல் மோடி பதவியேற்றபோது உள்ளார்ந்த நுண்ணறிவு, கடுமையான உழைப்பு ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் உயர் பொறுப்பை அடைந்துள்ளீர்கள் என்று கூறினார் கருணாநிதி.

1996 முதல் 2014 வரை, அதிமுக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்த 13 மாதங்கள் நீங்கலாக, திமுக மத்திய அரசில் அங்கம் வகிக்க கருணாநிதியின் அரசியல் நுட்பம் காரணமாக இருந்தது.

**மாநில சுயாட்சி**

மாநில அரசுகள் அதிக தன்னாட்சி அதிகாரம் பெறுவதிலும், மத்திய - மாநில அரசுகளின் உறவை வரையறுப்பதிலும் கருணாநிதி முக்கிய பங்காற்றினார். 1969இல் ராஜமன்னார் கமிட்டி அமைத்தது அதில் முக்கியமான ஒன்று.

மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில் ஒன்றை அமைக்கவும், மத்திய அரசு மாநில அரசைக் கலைக்க அதிகாரம் வழங்கும் இந்திய அரசியலமைப்பின் பிரிவு 365ஐ ஒழிக்கவும் அந்த கமிட்டி பரிந்துரை செய்தது. மத்திய அரசு அந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், மாநில சுயாட்சியை விட்டுக்கொடுக்காதவராகவே கருணாநிதி விளங்கினார்.

**குடும்ப அரசியல்**

சமூகத்துக்கு கருணாநிதி ஆற்றிய பங்களிப்புக்கு போற்றப்பட்டாலும், குடும்ப அரசியலில் ஈடுபட்டதாக மிகவும் விமர்சிக்கப்பட்டார். அதை முற்றிலும் ஒதுக்கிவிடவும் முடியாது.

தனது இறுதிக்காலம்வரை ஸ்டாலினை கட்சித் தலைவராகவோ, முதலமைச்சராகவோ ஆக்காவிட்டாலும், ஸ்டாலினின் மூத்த சகோதரர் அழகிரி, இளைய சகோதரி கனிமொழி ஆகியோரை அரசியலுக்கு கொண்டுவந்தது, தனது அக்காள் மகன் முரசொலி மாறனின் மகன் தயாநிதி மாறனை மத்திய அமைச்சர் ஆக்கியது ஆகியவற்றுக்கு திமுகவால் எவ்வகையிலும் நியாயம் கற்பிக்க முடியவில்லை. அவர்களின் அரசியல் பங்களிப்பும் இன்றுவரை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு



# விலைவாசி உயர்வு:

## இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடி உலக நாடுகளுக்கும் பரவுமா?

**விலைவாசி உயர்வால் நீங்களும் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?**

நீங்கள் மட்டும் அல்ல. உணவுப் பொருட்களின் விலை உயர்வு, பெற்றோல் டீசல் விலை உயர்வு, போக்குவரத்து கட்டணங்களின் விலை உயர்வு, வீட்டு வாடகை உயர்வு என்று உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் கடும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விலைவாசி உயர்வு உலக நாடுகளில் மிகப்பெரிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

பெற்றோல், டீசல் விலை உயர்வு.

சமையல் எண்ணெய், சமையல் எரிவாயு, காய்கறிகள் மற்றும் இதர உணவுப் பொருட்களின் விலை உயர்வு.

விவசாயத்திற்கு தேவைப்படும் உரங்களின் விலை உயர்வு.

அதிகரித்துக் கொண்டே வரும் வீட்டு வாடகை.

விமானம், பேருந்து மற்றும் ரயில் கட்டணங்களின் விலை உயர்வு.

**விலைவாசி உயர்வுக்கு என்ன காரணம்?**

ஒவ்வொரு காலகட்டத்திலும் விலைவாசி உயர்வு என்பது இயல்பான ஒன்று. ஆனால், இந்த முறை உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவதற்கு சில முக்கிய காரணங்கள் உள்ளன.

பருவநிலை மாற்றத்தால் விவசாய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் உரத்தட்டுப்பாடு.

கோவிட் பெருந்தொற்றால் உலகளவில் தடைபட்ட வர்த்தகம் மற்றும் விநியோக சங்கியில் ஏற்பட்ட நெருக்கடி.

ரஷ்யா-யுக்ரேன் போரால் ஏற்பட்டுள்ள சர்வதேச நெருக்கடி.

**நெருக்கடியை எதிர்கொள்ளும் நாடுகள்:**

இலங்கை எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட விளைவுகள் உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின. ஆனால், சமீப நாட்களாக பிரேசில், நியூசிலாந்து, இத்தாலி, தாய்லாந்து, பிரிட்டன் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் விலைவாசி உயர்வு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

**பிரேசில்**

பிரேசில் நாட்டில் அத்தியாவசிய



பொருட்கள் மற்றும் அடிப்படை சேவைகள் மீதான பணவீக்கம் கடந்த ஓராண்டாக 12.13 சதவீதமாக தொடர்ந்து வருகிறது. இதன் காரணமாக, நான்கில் ஒருவருக்கு போதுமான உணவு கிடைப்பதில்லை. விவசாய உற்பத்தியில் பிரேசில் ஒரு முக்கியமான நாடாக இருந்தாலும், உணவுப் பொருட்களின் விலை உயர்வு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், மக்களின் ஊதிய விகிதத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

**நியூசிலாந்து**

நியூசிலாந்து நாட்டில் வீட்டு வாடகை கடந்த ஓராண்டில் 12 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளதால் பலரும் ஆஸ்திரேலியாவுக்கு இடம்பெயர முடிவு செய்துள்ளனர்.

மானியங்கள் மூலம் எரிபொருள் விலையை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட சில நடவடிக்கைகளை நியூசிலாந்து அரசு முன்னெடுத்துள்ளது. ஆனால், இது போன்ற நடவடிக்கைகள் பெரும்பான மக்களுக்கு போதுமானதாக இல்லை.

**இத்தாலி**

கோவிட் பெருந்தொற்று மற்றும் யுக்ரேன் போரால் இத்தாலியின் வர்த்தகம் கடும் சரிவை சந்தித்துள்ளது. குறிப்பாக இத்தாலியில் செயல்படும் இரும்பாலைகளுக்கு தேவையான முக்கியமான மூலப் பொருட்கள் யுக்ரேனில் உள்ள மேரியபோல் நகரத்தில் இருந்துதான் வர வேண்டும். ஆனால், ரஷ்ய படையெடுப்பிற்கு பின்னர் இது முற்றிலும் தடைபட்டுள்ளது.

**தாய்லாந்து**

தாய்லாந்தின் முக்கிய உணவுப்பொருள் அரிசி. தாய்லாந்தில் உற்பத்தி செய்யப்படும் அரிசி மத்திய கிழக்கு நாடுகள் முதல் ஆப்பிரிக்கா வரை ஏற்றுமதி செய்யப்படு




கிறது. ஆனால், விவசாயத்திற்கு தேவைப்படும் உரத்தின் விலை கடந்த ஓராண்டில் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் அரிசி உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது. தாய்லாந்தில் அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டால், அதை சார்ந்துள்ள நாடுகளும் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும்.

**பிரிட்டன்**

வளமிக்க நாடுகளில் ஒன்றான பிரிட்டனில் கூட விலைவாசி உயர்வு கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமையல் எரிவாயு, மின் கட்டணம், உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் ஏற்பட் டுள்ள நெருக்கடியால் உணவு வங்கிகளை (food bank) நோக்கி மக்கள் படையெடுத்துள்ளார்கள். உணவு வங்கிகள் என்பது கோவிட் காலத்தில் மக்களுக்கு இலவச உணவு வழங்குவதற்காக உருவாக்கப்பட்டவை. பிரிட்டனின் பணவீக்கம் கடந்த ஓராண்டில் 9 சதவீதமாக அதிக ரித்துள்ளது. விரைவில் இது 10 சத வீதத்தை எட்டும் என்று இங்கிலாந்து வங்கி (Bank of England) எச்சரிக்கை விடுத்துள்ளது.

**இந்தியா**

இந்தியாவின் சில்லறை பணவீக்கம் கடந்த எட்டு ஆண்டுகளில் இல்லாத உயர்வை எட்டியுள்ளது. இந்தியாவின் தற்போதைய பணவீக்கம் 7.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனை 6.95 சதவீதமாக குறைத்தால்தான் நாட்டின் பொருளாதார நிலை அபாய கட்டத்திற்குச் செல்வதை தடுக்க முடியும். ஆனால், சமீபத்தில் இந்திய அரசு மேற்கொண்ட பெற்றோல் டீசல் விலை குறைப்பு, விலைவாசி உயர்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

**ஏற்றுமதியை தடை செய்யும் நாடுகள்**

ஜூன் மாதத்தில் இருந்து இறைச்சிக்கான கோழியை ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்போவதாக மலேசியா அறிவித்துள்ளது. இது உலக அளவில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருள் நெருக்கடியின் சமீபத்திய விளைவு. இதனால், மலேசியாவில் இருந்து கோழியை அதிகளவில் இறக்குமதி செய்யும் சிங்கப்பூர் கடும் நெருக்கடியை எதிர்கொள்ளும்.

முன்னதாக, கோதுமை ஏற்றுமதியை தடை செய்வதாக இந்தியாவும், பாம் ஆயில் ஏற்றுமதியை தடை செய்வதாக இந்தோனேசியாவும் அறிவித்திருந்தன.

யுக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பும், பருவநிலை மாற்றமும் தான் இதற்கு முக்கிய காரணிகளாக உள்ளன. மேலும், உணவுப் பொருட்களின் விலை கடுமையாக அதிகரிக்கும் என்று உலக வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது. உலக அளவில் மில்லியன் கணக்கான மக்கள் வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் பதிக்கப்படுவார்கள் என்றும் உலக வங்கி எச்சரித்துள்ளது.

---

# ஏழு தசாப்தங்களின் தலைவன்

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதேசமயம், சகோதரர்களுக்குள் நடக்கும் அதிகாரப் போட்டிக்கு இடையிலும் கருணாநிதி சிக்கிக் கொண்டார். கருணாநிதி தனது அரசியல் வாரிசாக அறிவித்த ஸ்டாலின் தலைமை ஏற்பதற்கு எதிராக பேசிய அழகிரியை கட்சியை விட்டே நீக்கும் அளவுக்கு இது கருணாநிதியை இட்டுச் சென்றது.

**‘அறிவியல்பூர்வமான ஊழல்’**

கருணாநிதி அறிவியல்பூர்வமாக அல்லது மதிநுட்பத்துடன் ஊழல் செய்வார் என்று அவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை திமுக வன்மையாக மறுக்கிறது. சென்னை மாநகரில் மேம்பாலங்கள் கட்டுவதில் ஊழல் நிகழ்ந்ததாக 2001இல் ஜெயலலிதா அரசால் நள்ளிரவில் கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கலாக பார்க்கப்பட்டது.

எனினும், 2ஜி வழக்கில் அவரது கட்சியைச் சேர்ந்த, அமைச்சராக இருந்த ஆ. ராசா மற்றும் அவரது மகள் கனிமொழி ஆகியோர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விசாரணை நீதிமன்றம் விடுவித்ததால், அது திமுகவுக்கு கடுமையான சேதாரத்தை உண்டாக்கியது.

அடுத்து வந்த பொதுத் தேர்தல், அதைத் தொடர்ந்து வந்த தேர்தல்களிலும் திமுக தோல்வியை சந்திக்க அது முக்கிய காரணமாக இருந்தது. அரசியல் ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் கருணாநிதி சிக்கல்களை எதிர்கொள்ள இது வழிவகுத்தது.

**இலங்கை தமிழர் பிரச்னை**

உலகத் தமிழர்களின் தலைவராக போற்றப்பட்டாலும், இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் செய்ததாக கருணாநிதி குற்றச்சாட்டுக்கு உள்ளானார். 2009 இல் இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதி நாட்களில் அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்க கருணாநிதி எதையும் செய்யவில்லை என்று கருணாநிதி விமர்சிக்கப்பட்டார்.

உண்மையில், போர் நிற்காதபோதும், போர் நின்றதாக காங்கிரஸ் தலைவர்கள் தம்மை ஏமாற்றியதாக கருணாநிதி உணர்ந்ததாக திமுக செய்தித்தொடர்பாளர் கே. எஸ். ராதாகிருஷ்ணன் கூறுகிறார். எனினும், இதுவரை பலரும் இதை நம்பத் தயாரக இல்லை. அவர் இறப்புக்கு பிறகும் இது சமூக வலைத்தளங்களில் பிரதிபலிக்கிறது.

**உச்ச நட்சத்திரம்**

அரசியலில் பல மன்னர்களை உருவாக்கியவராக மட்டுமல்லாது, திரைத் துறையிலும் கருணாநிதி ஓர் உச்ச நட்சத்திரமாகப் பார்க்கப்பட்டார்.

1949-50இல் கருணாநிதி கதை - வசனம், எழுதிய மந்திரி குமாரி படம் எம். ஜி. ஆரை வெள்ளித் திரையில் நட்சத்திரம் ஆக்கியது. பராசக்தி படத்துக்கு கதை - வசனம் எழுதி சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன் ஆகிய இருவரை நட்சத்திரங்கள் ஆக்கினார்.

1954இல் இன்னொரு வெற்றிப் படமான மனோகரா படத்துக்கு கதை - வசனம் எழுதினார். அந்தப் படத்துக்கு எழுதிய திரைக் கதையை புத்தகமாக வெளியிட்டு கிடைத்த பணத்தில், தம் முதல் குழந்தை என்று அவர் கூறிய, கட்சி ஏடான ‘முரசொலி’க்கு அச்சகம் ஒன்றை வாங்கினார். அவரது இறப்புச் செய்தியை சுமந்து கொண்டு முரசொலி இதழும் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தப்படும் போது, அவருக்கு அருகிலேயே வைக்கப்பட்டிருந்தது.

மரணத்துக்குப் பிறகும், தான் இறுதியாக ஓய்வெடுக்கும் இடத்துக்காகத் தாம் போராடவேண்டும் என்று கருணாநிதி எதிர்பார்த்திருக்க மாட்டார்.

தனது தொண்டர்களுக்கு முரசொலியில் கருணாநிதி இவ்வாறு எழுதுவார்: ‘வீரன் சாவதே இல்லை! கோழை வாழ்வதே இல்லை!’

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

**01.** வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

**02.**



(1) (2) (3)

**03.** இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

**04.** **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


**05.** சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

**06.** உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

**07.** உலக மரபுரிமை மையங்களாக ....................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

### CHANNEL-1

**04.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### CHANNEL - 2

**04.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 3,000 லீற்றர் டீசலை பதுக்கியவர் கைது!

அக்கரைப்பற்று, ஜூன் 04

**பதுக்கி வைக்கப்பட்ட 3 ஆயிரம் லீற்றர் டீசலுடன் ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.**

அம்பாறை - அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பில் வாகனத் தரிப்பிடம் ஒன்றிலேயே இந்த டீசல் கைப்பற்றப்பட்டது.

நேற்று முன்தினம் இந்தப் பகுதியை சுற்றிவளைத்து நடத்திய தேடுதலின்போது 3 தண்ணீர் தாங்கி பரல்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரம் லீற்றர் டீசலை கைப்பற்றியதுடன் ஒருவரை கைது செய்தனர்.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், சான்றுப் பொருளையும் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)



## காணாமல் போன பெண் சடலமாக மீட்கப்பட்டார்!

அம்பாறை, ஜூன் 04

அம்பாறை - மருதமுனையில் காணாமல் போன இரண்டு பிள்ளைகளின் தாய் சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 54 வயதான எம். ஆர். பஸீரா என்ற பெண்ணாவார்.

இவர் கடந்த இரண்டு தினங்களாக காணாமல் போயிருந்தார். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பிரதேச பள்ளிவாசல்களிலும் பொதுமக்கள் உதவி செய்யுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, பிரதேச மக்களும் பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் அவரின் வீட்டிலிருந்து சற்று தொலைவிலுள்ள குளத்தில் அவர் சடலமாக காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அதிகாலை 3 மணி முதல் ம.எண்ணெய்க்கு வரிசை



மட்டக்களப்பு, ஜூன் 04

காத்தான்குடி தெற்கு எல்லையிலுள்ள ஆரையம்பதி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணெய்க்காக நேற்று அதிகாலை முதல் நீண்டவரிசையில் பொது மக்கள் காத்திருந்தனர்.

இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்கவுள்ளதாக அறிந்த பொது மக்கள் அதிகாலை 3 மணி முதல் வரிசையில் காத்திருந்தனர். காத்திருந்தவர்களுக்கு இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வதில மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு இராணுவத்தின் ஏற்பாட்டில் உலருணவு

திருக்கோவில், ஜூன் 04

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் திருக்கோவில் பிரதேசத்தில் உதவி தேவைப்படும் தெரிவு செய்யப்பட்ட 100 குடுபங்களுக்கு உலர் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை - திருக்கோவில் - காஞ்சிரன்குடா இராணுவத்தளபதி மற்றும் கோமாரி படையணியின் கட்டளை தளபதி ஆகியோரால் இந்த நிவாரணப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிவாரணப் பொதிகளுக்கு கொரணை பிரதேசத்தை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் நிதி அனுசரணை வழங்கியுள்ளார்.



இந்த நிகழ்வில், திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், 242 படையணியின் படையணியின் கட்டளை அதிகாரி பெனதுறு, சிவில் நிர்வாக பொறுப்பதிகாரி கேணல் சில்வா, காஞ்சிரன் குடா படைப்பிரிவு முகாம் பொறுப்பதிகாரி மேஜர் அமதுது மற்றும் கிராம சேவை உத்தியோத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், இராணுவத்தினர் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## மாமாங்க பிள்ளையார் ஆலய வளாகப் பகுதியில் தீப் பரவல்!



மட்டக்களப்பு, ஜூன் 04

வரலாற்று பிரசித்தி பெற்ற மாமாங்கேஸ்வரர் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கரையில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை, ஆலயத்தின் தீர்த்தக் கரையில் காணப்படும் நாணல் புல் பகுதியில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மட்டக்களப்பு நகரம் முழுவதும் புகை பரவியது. தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவினர் முன்னெடுத்தனர்.

இதன்போது தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீயால் தீர்த் தக் கரையிலிருந்த நாணல்புல் பகுதிகளும், அங்கிருந்த சிறு உயிரினங்களும் அழிந்தன.

தீபரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் தெரியவராத நிலையில், இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## சிகரெட் விற்பனையகங்கள் சோதனை!

மட்டக்களப்பு, ஜூன் 04

மட்டக்களப்பு நகரில் சர்வதேச புகைத்தல் தினத்தையொட்டி சிகரெட் விற்பனை நிலையங்கள் சுற்றி வளைக்கப் பட்டன.



மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் இ. உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பில் சுமார் 15 கடைகள் சுற்றிவளைக்கப்பட்டு சிகரெட் தேடுதல்கள் நடத்தப்பட்டன என்று கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனை தேநீர்சாலை உட்பட நகரிலுள்ள பிரபல வர்த்தக நிலையங்களும் சோதனையிடப்பட்டன.

சிகரெட் விற்பனையாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டு எச்சரிக்கப் பட்டதுடன் சிக ரெட் விற்பனை செய்யாத கடைகளுக்கு நற்சான்றிதழ் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனை புற்றுநோய் விடுதிக்கு முன்னாலுள்ள ஹோட்டலிருந்து பெருமளவான சிகரெட்கள் கைப்பற் றாப்பட்டன. அந்த வர்த்தகருக்கு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (ஐ)

## மேலதிக நேர வகுப்புக்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

மூதூர், ஜூன் 04

மூதூர் பிரதேசத்தில் இயங்குகின்ற தனியார் கல்வி நிலைய மற்றும் மேலதிக நேர வகுப்புகளை குறித்த நேரத்துக்குள் நடத்தி முடிக்க வேண்டுமென மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம். எம். ஏ.அரூஸ் அறிவித்துள்ளார்.

அண்மை நாட்களாக சிறுமியர் கடத்தப்படுகின்றமை மற்றும் கொலை செய்யப்படுகின்றமை உள்ளிட்ட காரணங்களை முன்னிட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாலை நேர வகுப்புக்களை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிக்குள் நடத்தி முடிக்கவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி மேலதிக வகுப்புக் களை நடத்தி ஏதாவது அசம்பாவிதங்கள் நடைபெற்றால் அதற்கு உரியவர்களே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தவிசாளர் கூறியுள்ளார்.

அறிவித்தலின் பிரதிகள் மூதூர் வலயக்கல்வி பணிப்பாளர், மூதூர் பிரதேச செயலாளர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டோருக்கு மூதூர் பிரதேச சபையின் தவிசாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)



# இந்தியாவில் ஆண்டு முழுவதும் சிறுபான்மையினர்மீது தாக்குதல்!

## அமெரிக்க அரசு அறிக்கை

வாஷிங்டன், ஜூன் 04

சர்வதேச நாடுகளில் பின்பற்றப்படும் மத சுதந்திரம் குறித்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சு பாராளுமன்றத்தில் வருடாந்த அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. இதில், கடந்த 2021ஆம் ஆண்டு முழுவதும் இந்தியாவில் சிறுபான்மையினர்மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் இந்த அறிக்கையை வெளியிட்ட இந்த அறிக்கையில்,

இதில், இந்தியாவில் பல்வேறு அரசு சாரா அமைப்புகள், சிறுபான்மை நிறுவனங்கள் தங்களின்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்த குற்றசாட்டுகள் குறித்தும் ஆராய்ந்துள்ளது. இருப்பினும், இந்த குற்றச்சாட்டுகளின் விசாரணை முடிவுகள் மற்றும் அரசின் பதில்கள் குறித்து அறிக்கை பேசவில்லை. ”கொலை, தாக்குதல், மிரட்டல் என சிறுபான்மை சமூகதத்தினர் மீது ஆண்டு முழுவதும் தாக்குதல்கள் தொடர்ந்துள்ளது. பசுவதை, மாட்டிறைச்சி விற்றமை போன்றவற்றை காரணம் காட்டி இந்துக்கள் அல்லாதோர் மீது நடத்தப்பட்ட கும்பல் வன்முறையும் இதில் அடங்கும்” என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

### உணவு நெருக்கடி மேலும் உயரும் அபாயம்:

# உக்ரைனின் கோதுமை உற்பத்தி 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது

மொஸ்கோ, ஜூன் 04

உலகின் முன்னணி தானிய ஏற்றுமதி நாடான உக்ரைனில் மே மாதத்தில் கோதுமை உற்பத்தி 40 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. சோளம், சூரிய காந்தி எண்ணெய் உற்பத்தியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பல நாடுகளில் உணவு தட்டுப்பாடு ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

உலகம் முழுவதும் எண்ணெய் வித்துகள் உற்பத்தி பாதிக்கப்பட்டு சமையல் எண்ணெய்க்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. மலேசியோ, இந்தோனேஷியா என பாம் ஒயில் உற்பத்தி செய்யும் நாடுகளிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தத் தட்டுப்பாடு பல நாடுகளிலும் எதிரொலிக்கிறது.

சமையல் எண்ணெயை தொடர்ந்து உலக அளவில் கோதுமைக்கும் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ரஷ்யா- உக்ரைன் போர் காரணமாக உலகில் கருங்கடல் பகுதியில் இருந்து கோதுமை ஏற்றுமதி குறைந்தது உலகளவில் கோதுமைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. கோதுமை ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கும் ரஷ்யா - உக்ரைன் இரண்டு நாடுகளும் போரில் சிக்கியுள்ளன. இதனால் அந்த நாடுகளில் இருந்து வழக்கமாக கோதுமை வாங்கும் நாடுகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று, கோதுமை பயிர் செய்கையில் முன்னணி நாடுகளில் ஒன்றான உக்ரைனில் போர் காரணமாக 40 வீதமான கோதுமை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

2021இல் 3 கோடியே 30 இலட்சம் தொன் கோதுமையை உற்பத்தி செய்த இந்த நாட்டில் இந்த ஆண்டில் ஒரு கோடியே 90 இலட்சம் கோதுமையே உற்பத்தியாகி



யுள்ளது. இதுமட்டுமின்றி சோளம் மற்றும் சூரிய காந்தி உற்பத்தியும் கடந்த மே மாதத்தில் சரிவடைந்துள்ளன.

உலகில் கோதுமை ஏற்றுமதி செய்யும் முதல் 5 நாடுகளில் ரஷ்யா, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் உள்ளன. இந்த ஏற்றுமதியில் முப்பது சதவீதம் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து வருகிறது.

உக்ரைன், ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளில் இறக்குமதி செய்யப்படும் கோதுமையை நம்பியே 25 ஆபிரிக்க நாடுகள் உள்ளன. அந்த நாடுகள் தங்களின் மொத்த கோதுமை தேவையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் இறக்குமதி செய்து வருகின்றன. அதேபோல 15 நாடுகள் தங்கள் 50 சதவீதம் கோதுமை தேவையில், உக்ரைன், ரஷ்யாவில் இருந்து இறக்குமதியை நம்பியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்னும் எத்தனை கொலைகளை நாம் ஏற்க தயாராக இருக்கிறோம்!

## அமெரிக்க ஜனாதிபதி பைடன் கேள்வி

வாஷிங்டன், ஜூன் 04

அமெரிக்காவில் துப்பாக்கி சட்டங்களை கடுமையாக்க வேண்டும் என சட்டம் இயற்றும் வல்லுநர்களை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியுள்ளார்.

இன்னும் எத்தனை படுகொலைகளை நாம் ஏற்கத் தயாராக இருக்கிறோம்? எனக் கேள்வி எழுப்பிய அவர், அமெரிக்க மக்களை நாங்கள் மீண்டும் தோல்வியடையச் செய்ய முடியாது. பெரும்பான்மையான குடியரசுக் கட்சியின் செனட்டர்கள் துப்பாக்கி பயன்பாட்டுக்கு எதிரான கடுமையான சட்டங்களை ஆதரிக்க மறுத்தது மனச்சாட்சியற்றது எனவும் அவர் கூறினார்.



குறைந்தபட்சம், சட்டம் இயற்றுபவர்கள் தாக்குதல் ஆயுதங்களை வாங்கக்கூடிய வயதை 18ல் இருந்து 21 ஆக உயர்த்த வேண்டும். இது பள்ளிகளையும் மருத்துவமனைகளையும் கொலைக் களங்களாக மாற்றியுள்ள வன்முறையை கட்டுப்படுத்த உதவும்.

கைத்துப்பாக்கி வாங்குபவர்களின் பின்புல சோதனைகளை வலுப்படுத்த வேண்டும். அதிக திறன் கொண்ட தோட்டாக்களை தடை செய்ய வேண்டும். துப்பாக்கிகளை பாதுகாப்பாக சேமித்து வைப்பதை கட்டாயமாக்குதல் மற்றும் துப்பாக்கி உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளில் செய்யப்படும் குற்றங்களுக்கு பொறுப்பேற்க அனுமதித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)



# எங்களின் 20வீத நிலத்தை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது

## உக்ரைன் ஜனாதிபதி குற்றச்சாட்டு

கீவ், ஜூன் 04

உக்ரைனின் 20வீதமான நிலப்பரப்பை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளதாக என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

லக்ஸம்பேர்க் பாராளுமன்றத்தில் மெய்நிகர் வழியில் பேசிய அவர்,

“நாட்டின் முன்னரங்க நிலைகள் 1000 கிலோ மீற்றர்கள் நீளம் வரை விரிவுபடுத்தப்பட்டு உள்ளன. நாங்கள் எப்படி இருக்கிறோமோ, அப்படியே இருக்க விரும்புகிறோம் என்பதுதான் லக்ஸம்பேர்க்கின் தேசிய கோஷமாகும். இதே கொள்கையின் அடிப்படையில்தான் நாங்கள் தற்போது ரஷ்யாவுடன் போரிட்டு வருகிறோம்.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து சுமார் 100 நாட்கள் ஆகின்றன. இந்த 100 நாட்களில் நாங்கள் 30, 000 வீரர்களை இழந்துள்ளோம். இருந்தாலும், இந்தப் போரை தொடர்ந்து நடத்த ரஷ்யா விரும்புகிறது. காரணம் ஒரு தனி நபர் அதாவது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நாங்கள் எப்படி இருக்கிறோமோ அப்படியே இருக்க வேண்டும் என்பதை விரும்பவில்லை.

தற்போது உக்ரைனின் 20 சதவீத நிலப்பரப்பை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது. கிரீமியா தீபகற்பம், கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகள் உட்பட 1.25 இலட்சம் கிலோ மீற்றர் பரப்பளவு ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் உக்ரைன்மீது குண்டு மழை பொழியப்படுகிறது. புதன்கிழமை மட்டும் உக்ரைன்மீது ரஷ்யா 15 ஏவுகணைகளை வீசியது. கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இதுவரை 2,478 ரஷ்ய ஏவுகணைகள் பெரும்பாலும் பொதுமக்கள் பகுதிகளில் வீசப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

# உக்ரைனில் தொடரும் யுத்தம் 68 இலட்சம் பேர் அகதிகளாகினர்!

கீவ், ஜூன் 04

உக்ரைன்மீது ரஷ்யா படையெடுத்து 100 நாட்கள் எட்டிய நிலையில், உக்ரைனிலிருந்து 68 இலட்சம் பேர் அகதிகளாக வெளியேறிவிட்டனர்.

ரஷ்யா - உக்ரைன் போர் தொடங்கி 100 நாட்கள் கடந்துள்ளன. இந்நிலையில், உக்ரைன் நாட்டின் முக்கிய நகரங்கள் சீர்குலைந்து ரஷ்ய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் சென்று விட்டன.

ரஷ்ய தாக்குதல் தொடங்கியதில் இருந்தே, அந்நாட்டு மக்கள் பாதுகாப்பு தேடி அயல் நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். இது



தவிர ருமேனியா, ஹங்கேரி, மால்டோவா மற்றும் ஸ்லோவாகியா ஆகிய நாடுகளுக்கும் உக்ரைன் மக்கள் அகதிகளாக சென்றுள்ளனர்.

போலந்து நாட்டில் மட்டும் 36 இலட்சம் பேர் குடியேறியுள்ளனர் என்று அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பு தெரிவித்துள்ளது. இதனால் அந்நாட்டின் மக்கள் தொகை கடந்த 3 மாதங்களில் 10வீதம்அதிகரித்துவிட்டது.

ரஷ்ய தாக்குதல் காரணமாக உக்ரைனிலிருந்து மொத்தம் 68 இலட்சம் பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டு உக்ரைன் மக்கள் தொகை 4 கோடியே 30 இலட்சமாக இருந்தது. தற்போது 3 கோடியே 70 இலட்சமாக குறைந்துள்ளது. இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டதிலிருந்து, ஐரோப்பா கண்ட மிகப்பெரிய அகதிகள் பிரச்னை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பைனலிஸிமா கிண்ணம் ஆர்ஜென்ரீனா வசமானது

லண்டன், ஜுன் 04

இத்தாலி அணியை வீழ்த்தி 'பைனலிஸிமா' கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆர்ஜென்ரீனா அணி. இதன் மூலம் இந்தத் தொடரில் இரண்டாவது முறையாக ஆர்ஜென்ரீனா சம்பியனாகியுள்ளது.

பைனலிஸிமா வெற்றிக் கிண்ணப் போட்டியை தென்னமெரிக்க உதைபந்தாட்ட சம்மேளனமும் ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனமும் இணைந்து நடத்துகின்றன. இந்தப் போட்டியில் கோபா அமெரிக்கா சம்பியனாக இருக்கும் அணியும்,

ஐரோப்பிய சம்பியன்ஷிப்பில் வென்ற அணியும் மோதும். லண்டனில் நேற்று முன்தினம் அதிகாலை நடந்த இந்தப் போட்டியில் இத்தாலி, ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின.

இதில், ஆர்ஜென்ரீனா 3 -0 என்ற கோல் கணக்கில் வெற்றி



பெற்றது. அந்த அணிக்காக லாதரோ மார்ட்டினஸ் 28ஆவது நிமிடத்திலும், ஏஞ்சல் டி மரியா 45.1ஆவது நிமிடத்திலும் பௌலோ டிபாலோ 90.4 ஆவது நிமிடத்திலும் கோல்களை அடித்தனர்.

ஒரு வருடத்துக்குள் மெஸ்ஸி தலைமையில் ஆர்ஜென்ரீனா வென்றுள்ள இரண்டாவது சம்பியன் பட்டம் இதுவாகும். முன்னதாக, கடந்த ஆண்டு ஜுலையில் கோபா அமெரிக்கா சம்பியனாகியிருந்தது ஆர்ஜென்ரீனா. (ஐ)



# இலங்கை அணியின் பயிற்றுநராக மலிங்க

கொழும்பு, ஜுன் 04

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான லசித் மலிங்கவை பந்து வீச்சு பயிற்றுநராக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய அணி விளையாடவுள்ள தொடரில் மலிங்க பயிற்றுநராக செயல்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், "மலிங்க, இலங்கையின் பந்து வீச்சாளர்களுக்கு ஆதரவளிப்பதோடு, தந்திரோபாய நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கி, மூலோபாய திட்டங்களை களத்தில் செயல்படுத்த உதவுவார். மலிங்கவின் பரந்த அனுபவமும், புகழ்பெற்ற மரணப் பந்துவீச்சு நிபுணத்துவமும், இந்த முக்கியமான தொடருக்கு அணிக்கு பெரிதும் உதவும் என்று இலங்கை கிரிக்கெட் நம்புவதாக", தெரிவித்துள்ளது. (ஐ)

# இங்கிலாந்துடனான டெஸ்ட் நியூசிலாந்து அபார பந்துவீச்சு

லோர்ட்ஸ், ஜுன் 04

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்டத்தில் சோதப்பினாலும் பந்து வீச்சில் கலக்கியுள்ளது நியூசிலாந்து அணி.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையே யான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் லோர்ட்ஸ் மைதானத்தில் தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் 40 ஓவர்களில் சகல விக்கெட் களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்தின் தொடக்க ஆட்டக்காரர்களான அலெக்ஸ் லீஸ் மற்றும் ஜாக் கிராவ்லி இணை வலுவான தொடக்கத்தை கொடுத்தனர். அவர்களின் இணைப்பில் 59 ஓட்டங்களில் ஜேமிசன் பந்தில் உடைந்தது.

ஜாக் கிராவ்லி 43 ஓட்டங்



களுக்கு ஆட்டமிழந்தார். அடுத்த விக்கெட்டும் ஜேமிசனுக்கே விழுந்தது. போப் 7 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக ஜோ ரூட் 11 ஓட்டங்களுக்கு கொலின் டி கிராண்ட்ஹோம் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வரும் சரிவிற்கு இதுதான் தொடக்கப்புள்ளி என அப் போது யாருக்கும் தெரியவில்லை.

அடுத்து விளையாடிய ஜொன்னி பெயர்ஸ்ரோ, அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ், விக்கெட் காப்பாளர் பென் போக்ஸ், மத்தியூ பட்ஸ் ஆகியோர் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து அணி சார்பில் ரிம் சௌதி , டிரண்ட் போல்ட் , கைல் ஜேமிசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை எடுத்தனர்.

முதல் நாள் ஆட்டம் முடிவில் 36 ஓவர்களில் 116 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்திருந்தது இங்கிலாந்து அணி. (ஐ)

# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் இறுதியாட்டத்தில் இகா!

பாரிஸ், ஜுன் 04

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தப் போட்டியில் 2ஆவது முறையாக இறுதிச் சுற்றுக்கு வந்திருக்கும் ஸ்வியாரெக், அரையிறுதியில் 6-2, 6-1 என்ற நேர் செற்களில் ரஷ்யாவின் டரியா கசட்கினாவை மிக எளிதாக வீழ்த்தினார். இதன் மூலம் தொடர்ந்து 34 போட்டிகளில் தொடர் வெற்றியைப் பதிவு செய்திருக்கிறார் ஸ்வியாடெக்.

இவர், கடந்த 2020 பிரெஞ்சு ஓபனில் கோப்பை வென்று தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இந்தியா, பாகிஸ்தான் போட்டிகள் அவசியம்!



இஸ்லாமாபாத், ஜுன் 04

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் வேண்டுமென இரு நாட்டு வீரர்களும் விரும்புகின்றனர் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் முகமது ரிஸ்வான் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013இற்கு பிறகு இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான நேரடி கிரிக்கெட் தொடர்கள் எதுவும் நடத்தப்படவில்லை. இரு அணிகளும் ஐ.சி. சி. மற்றும் ஆசிய கோப்பை போன்ற தொடர்களில் மட்டுமே விளையாடி வருகின்றன. அயல் நாடுகளாக இருந்தாலும் அரசியல் ரீதியான சிக்கல் காரணமாக நேரடி தொடர்கள் நடத்தப்படாமல் உள்ளன. கடைசியாக இரு அணிகளும் கடந்த ஆண்டு நடைபெற்ற இருபது - 20 உலகக் கோப்பை லீக் போட்டியில் விளையாடி இருந்தன.

இப்போது பாகிஸ்தான் நாட்டில் சர்வதேச கிரிக்கெட் அணிகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடர்களில் விளையாடி வருகின்றன. இந்திய அணி கடைசியாக கடந்த 2005-06 காலப்பகுதியில் பாகிஸ்தான் மண்ணில் விளையாடி இருந்தது.

இந்நிலையில், நேரடி கிரிக்கெட் தொடர்களில் விளையாட இரண்டு அணிகளை சேர்ந்த வீரர்களும் விரும்புகின்றனர் என்று தெரிவித் துள்ளார் பாகிஸ்தான் வீரர் ரிஸ்வான்.

"இரு அணி வீரர்களும் நேருக்கு நேராக மோதி விளை யாடும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட விரும்புகின்றனர். ஆனால் அரசு வட்டார விவகாரங்கள் வீரர்களின் கட்டுப்பாட் டில் இல்லை. இந்திய வீரர் புஜாராவுடன் கிரிக்கெட் தொடர்பாக நிறைய பேசினேன். அவரிடமிருந்து சிலவற்றை கற்றுக்கொண்டேன். வெவ்வேறு நாட்டை சேர்ந்தவர்களாக நாங்கள் இருந்தாலும் கிரிக்கெட் என்ற ஒற்றை புள்ளியில் இணைந்துள்ளோம். ஆட்டத்தில் அவர் செலுத்தும் கவனத்தை கண்டு நான் வியந்துள் ளேன்" என தெரிவித்துள்ளார் ரிஸ்வான்.

புஜாராவுடன் அவர் கவுன்டி கிரிக்கெட்டில் சசெக்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விவசாயத்துறை பிரச்னைகளை சீர்செய்தால் ஆறு மாதங்களில் உணவுத்தட்டுப்பாடு நீங்கும்!

## ஐ.நா. பிரதிநிதிகளிடம் கூறினார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜூன் 04

உரம், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான பற்றாக்கு றையை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தால் ஐந்தாறு மாதங்களுக்குள் தற்போதைய உணவுத் தட்டுப்பாட்டைக் கட்டுக்குள் கொண் டுவர முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



உணவுப் பற்றாக்குறை அச்சுறுத்தல் காரணமாக விவசாயத் திணைக்கள அதிகாரிகள் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தயாரித்து வருவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி விம்லேந்திர ஷரன் மற்றும் ஐ.நா. அபிவிருத்தி திட்ட பிரதிப் பிரதிநிதி மலின் ஹெர்விக் ஆகியோருடன் பிரதமர் அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

தற்போது விவசாயத் துறை எதிர்நோக்கும் பிரதான பிரச்னை உரங்கள் மற்றும் எரிபொருள் என தெரிவித்த பிரதமர், எதிர்கால உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அவர் தொடங்கியுள்ள நகர்ப்புற விவசாயத் திட்டத்தையும் விவரித்தார். (அ)

# ரஷ்ய விமானம் வெளியேற தடை!

கொழும்பு, ஜூன் 04

ரஷ்ய ஏரோபுளோட் விமான சேவைக்கு சொந்தமான விமானம் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவின் பிரகாரம், ரஷ்யாவின் மொஸ்கோ நகருக்குச் செல்லவிருந்த ஏ-330 ரக விமானம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அயர்லாந்து நிறுவனம் தாக்கல் செய்த முறைப் பாட்டை விசாரித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்கவினால் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு எதிர் வரும் 16ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

ரஷ்ய ஏரோபுளோட் எயார் லைன்ஸ் விமானம் எஸ்.யு.-288 நேற்றுமுன்தினம் முற்பகல் 10.10 மணியளவில் ரஷ்யாவின் மொஸ்கோவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

நேற்று முன் தினம் மதியம் 12.50 மணிக்கு மீண்டும் மொஸ்கோவுக்கு விமானம் புறப்படவிருந்தது.

இந்த விமானத்தில் பயணிக்க 200க்கும் மேற்பட்ட பயணிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பிரதிவாதி விமான சேவைக்கு சொந்தமான விமானம் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் உத்தரவைக் கோரி முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டை பரிசீலித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார். கட்டுநாயக்க விமான நிலைய வெளியேறும் பிரிவின் தலைவருக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானத்தில் ஏறுவதற்கு தடை விதித்து கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, விமானப் பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், விமானத்துக்கு வந்த பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை சுற்றியுள்ள சுற்றுலா விடுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் தலைமை அதிகாரி, மனு தாக்கல் செய்த தரப்பினர், ஏரோபுளோட் அதி காரிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பில்தற்போது பேச்சு இடம்பெற்று வருவதாக கட்டுநாயக்க விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# தொலைத்தொடர்பு வரி உயர்வு

கொழும்பு, ஜூன் 04

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தொலைத்தொடர்பு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 11.25 சதவீதமாக இருந்த வரி 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வற் வரியும் கடந்த 1ஆம் திகதி முதல் 8 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)



# வரிசையில் காத்திருந்த சங்கக்கார!

கொழும்பு, ஜூன் 04

இலங்கையின் முன்னாள் கிரிக்கட் வீரர் குமார சங்கக்கார, வாகன அனுமதிப் பத்திரம் புதுப்பிப்பதற்காகச் சென்று வரிசையில் நின்ற புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தற்போது பொருட்களைக் கொள்வனவு செய்யவும் தேவைகளை நிறைவேற்றவும் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, இலங்கையின் முன்னாள் கிரிக்கட் வீரர் குமார சங்கக்கார வரிசையில் நிற்கும் புகைப்படங்கள் வெளியாகி, சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளன.

இவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கத்திற்கு எதிராகவும் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
20
–
05
–
1942



உதிர்வு
06
–
05
–
2022

கடந்த 06.05.2022 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் கனகையா சின்னத்தம்பி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 03.06.2022 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் மட்டக்குழி காக்கைதீவு தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

42, மியூஸ் வீதி,
கொழும்பு - 02

தகவல் :
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

மலர்வு
14
-
03
-
1935



உதிர்வு
28
-
05
-
2022

**கனகரத்தினம் சுப்பிரமணியம்**

(ப. நோ. கூ. சங்கம்- வவுனியா)

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Kornwestheim ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சுப்பிரமணியம் அவர்கள் 28.05.2022 சனிக்கிழமை அன்று ஜேர்மனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சுந்தராம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா சிவஞானம் (மானிப்பாய்) தம்பதிகளின் அன்பு மருமகனும்,புனிதவதி(ஜேர்மனி) அவர்களின் ஆருயிர்க் கணவரும், மஞ்சுளா (Vancouver - கனடா), கணன் (London, பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமணன் (Vancouver-Canada) அவர்களின் அன்பு மாமனாரும்,மாலவன், ஆதவன் ஆகியோரின் அன்புப் பேரனும்,காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிவபாதசுந்தரம், இரத்தினசபாபதி, இராசம்மா, சின்னம்மா, புவனேஸ்வரி, சீவரத்தினம் மற்றும் பாக்கியம்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,காலஞ்சென்றவர்களான சின்னையா, சோதிப்பிள்ளை, கனகம்மா, நாகலிங்கம், இளையதம்பி, நடராசா, சபாரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 05 Jun 2022 3:00 PM - 5:00 PM
Monday, 06 Jun 2022 4:00 PM - 6:00 PM
Neuer Friedhof Aldinger Str. 27, 70806 Kornwestheim, Germany

கிரியை
Wednesday, 08 Jun 2022 10:00 AM - 2:00 PM
Neuer Friedhof Aldinger Str. 27, 70806 Kornwestheim, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
**புனிதவதி - மனைவி** Mobile : +4971547493
**கணன் - மகன்** Mobile : +447402291621
**மஞ்சு - மகள்** Mobile : +16048256735
**ரமணன் - மருமகன்** Mobile : +16048254540
**சூரியா - உறவினர்** Mobile : +4915111131235

## போரில்...

வது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 74 ஆண்டுகளாக தமிழ் மக்கள் விடுக்கும் வேண்டுகோள் அதிகார பகிர்வின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே. அதனை புதிய அரசமைப்பின் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை அரசு, அரசமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அது பழைய அரசமைப்பில் புதிதாக "பச்" போடுவதாகவோ அல்லது 'ரிங்கரிங்' செய்வதாகவவோ இருக்கக் கூடாது. அரசமைப்பு திருத்தம் அன்றி முழுமையான புதிய அரசமைப்பு ஒன்றே அவசியமாகின்றது.

தமிழ் மக்களின் பிரச்னைகள் நீண்ட காலமாக தேசிய பிரச்னையாக உருவெடுத்ததுள்ளன. புதிய அரசமைப்பின் மூலம் அதற்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பது அவசியம்.

போர் முடிவடைந்தவுடன் தமிழ் மக்களின் பிரச்னையும் முடிவடைந்து விட்டது என்று நினைத்தால் அது தவறு. 1956ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் விடுத்து வரும் வேண்டுகோளுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் அரசமைப்பின் மூலம் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. பெரும்பான்மையானவர்கள் அதனை விரும்பவில்லை எனக் கூறிக்கொண்டு தொடர்ந்தும் அதனைக் தட்டிக் கழிக்க முடியாது.

தமிழ் மக்கள் நாம் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால், எமது வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும். அது தொடர்பில் பேச்சுகளை நடத்துவதற்கும் இது மிகவும் பொருத்தமான காலமாக உள்ளது.

காலிமுகத்திடலில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட தின நினைவு நிகழ்வும், போரில் உயிரிழந்த மக்களின் நினைவேந்தல் நிகழ்வும் கூட நடத்தப்படுகின்றது. அதற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டு முதல் தடவையாக இவ்வாறு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இது மிகவும் சிறந்த விடயமாகும்.

போரில் மரணமடைந்த தமிழ் மக்களைப் போன்று போரால் மரணமடைந்த இராணுவத்தினர் தொடர்பிலும் தமிழ் மக்களாகிய நாம் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறான ஒரு நிலைக்கு நாம் வந்துள்ளோம் என்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்த அடிப்படையிலேயே சுமார் எழுபத்தி நான்கு ஆண்டுகள் தொடரும் தேசிய பிரச்னைக்கு தீர்வு காண முடியும். நாம் ஒன்றிணையவேண்டும், ஒன்றாக செயற்பட வேண்டும் என்றெல்லாம் நாடு வீழ்ச்சியடைந்துள்ள இந்த நிலையிலேயே நாம் சிந்திக்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அதற்காகப் பயன்படுத்துவது சிறந்தது என நான் நினைக்கின்றேன்.

நாடு பெரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள காலம் இது. இதற்கு முழுமையான தீர்வு காண வேண்டுமானால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவதுபோல 'சிஸ்டம் சேஞ்ச்' ஒன்று அவசியம். அதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் அது மேலும் காலதாமதமாகும் போது நெருக்கடிகளே அதிகரிக்கும்-என்றார்.

## தொலைபேசி...

இருப்பினும், இணையக கட்டணங்கள் 4 சதவீதத்தால் மட்டுமே அதிகரிக்கப்படவுள்ளன என்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், வற் வரி 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக அதிகரிப்பதன் மூலம் தொலைபேசிக் கட்டணம் சுமார் 8 சதவீதம் வரை உயரும்.

கைபேசி சேவை வழங்குநர்களும் தமது இணைப்புக் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதே நேரத்தில், முற்கொடுப்பனவு அட்டைப் பயனர்கள் அவர்கள் றீலோட் செய்யும் தொகைக்கு குறைந்த அளவிலான இணைய வசதி மற்றும் அழைப்பு நேரங்களைப் பெறுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மூன்று கட்டங்களாக வரிகளை அதிகரிப்பதற்கான திட்டத்தை பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலி ஆதரவு...

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரிவினைவாதத்தை கோரிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வெளிநாட்டு சக்திகள் மற்றும் உள்நாட்டில் அதன் மறைமுக ஆதரவுக் குழுக்களால் கணிசமான அச்சுறுத்தல்கள் உண்டு.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான அவர்களின் நடவடிக்கைகளின் பின்னணியில், அவர்கள் தொடர்ந்து வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து குறிப்பிடத்தக்க உதவிகளைப் பெற முனைவது, அண்மைய மனித உரிமைகள் குற்றச்சாட்டுகளின் மூலம் தெளிவுபடுகிறது.

அத்துடன் சமீபத்தில் அரசிற்கெதிராக நாட்டில் ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் சட்டத்துக்கு அச்சுறுத்தலாக அமைவதை, நிராகரிக்க முடியாது.

மாறிவரும் பாதுகாப்பு சூழலுக்கு இடமளிக்கும் மற்றும் திறம்பட பதிலளிக்கும் ஒரு பாதுகாப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு ஒரு வலுவான, தகவமைக்கக்கூடிய மற்றும் விரிவான பாதுகாப்புக் கொள்கை கட்டாயமாகக் கருதப்படுகிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் சமூக ஒற்றுமையை சிதைப்பதுடன் நமது சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பை சீர்குலைக்கும்-என்றார். (அ)

## கடற்படையினர்...

வர்கள் கடற்படையினருடன் சமரசமாகி தொழிலுக்கு சென்றனர். அவர்கள் மாலை 5.30 மணியளவில் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் படகில் அந்தப் பகுதிக்கு வந்த கடற்படையினர் படகுகளை சோதனையிட்டது. அவர்களை படகுகளுடன் தீடைக்கு கொண்டு செல்ல முற்பட்டுள்ளனர்.

'வேண்டுமானால் எம்மை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லுங்கள். எதற்கு யாருமே அற்ற தீடைக்கு கொண்டு செல்கின்றீர்கள்' என மீனவர்கள் கேள்வி எழுப்பினர். அவர்களின் கருத்துக்கு செவிசாய்க்க மறுத்த கடற்படையினர் மீனவர்களை தீடைக்கு கொண்டு சென்றனர். தீடையில் இறக்கிய மீனவர்களை மீண்டும் சோதனை செய்ததோடு உடல் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

அத்துடன், பேசாலையில் முரண்பாடு ஏற்பட்டபோது பிடிக்கப்பட்ட காணொலி மூலம் அடையாளம் காணப்பட்ட மீனவர்கள் ஆறு பேரை அவர்கள் கடுமையாக தாக்கினர் என்று கூறப்படுகின்றது. இதில் அவர்கள் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஏனைய மீனவர்களின் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தால் மன்னாரில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மீனவர் சங்கங்கள் பங்குத் தந்தை ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் கடற்படையினரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் தீர்வு கிட்டவில்லை என்று தெரிய வருகின்றது. (ஐ)

# கதிர்காமம் பாத யாத்திரை இன்று ஆரம்பமாகின்றது!

வடமராட்சி, ஜூன் 04

கதிர்காம கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழாவை ஒட்டிய பாத யாத்திரை இன்று சனிக்கிழமை காலை 8.30 தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகிறது.

வருடந்தோறும் பாத யாத்திரைக்கு தலைமை தாங்கும் காரைதீவைச் சேர்ந்த வேல் சுவாமி தலைமையிலான குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை காலை செல்வச் சந்நிதி கோவிலை அடைந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தங்கியுள்ளனர்.

இன்று சனிக்கிழமை காலை செல்வச் சந்நிதியில் இடம்பெறும் விசேட பூஜை வழிபாடுகளில் இந்தக் குழுவினர் பங்கேற்று, கோவில் பூசகரிடம் வேல் பெற்றுக் கொண்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் காலை உணவை முடித் துக் கொண்டு சந்நிதியான் ஆச்சிரமத் தைச் சேர்ந்த மோகன் சுவாமிகளிடம் ஆசி பெற்றுக் கொண்டு கதிர்காமம் நோக்கி பாத யாத்திரையை ஆரம்பிப் பார்கள்.

கொடிகாமம், பரந்தன், வற்றாப்பளை, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக அம்பாறை மாவட்டத்தை சென்றடைந்து அங்கிருந்து குமணகாட்டுப் பாதை ஊடாக செல்லும் இந்தக் குழுவினர் கதிர்காமக் கந்தன் திருக்கோயிலை சென்றடைவார்கள்.

(ஐ-2)

## மின்...

தாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பிரகீத் வழக்கு...

கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கில் சாட்சி வழங்குவதற்காக மன்றில் முன்னிலையான சுமதிபால சுரேஷ் எனும் சாட்சியாளர், இதற்கு முன்னர் சாட்சி வழங்குவதற்காக மன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பதுடன், பின்னர் அவரை கைது செய்வதற்காக நீதிமன்றத்தினூடாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும மன்றில் சுட்டிக்காட்டினார்.

சாட்சியாளருக்கு அழுத்தம் விடுக்கப்படுவதால், அது தொடர்பில் விசாரணையொன்றை நடத்த கட்டளையிடுமாறு சட்டத்தரணி மன்றில் கோரிக்கை விடுத்தார்.

இந்த வழக்கில் சாட்சியாளர்களுக்கு அழுத்தம் விடுக்கப்படுகின்றமை தமக்கும் விளங்குவதால், விடயம் தொடர்பில் நீதிமன்றம் கவனம் செலுத்த வேண்டும் என மனுதாரர் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றில் சுட்டிக்காட்டினார்.

அதன் பின்னர் சாட்சிகள் விசாரிக்கப்பட்டதையடுத்து, மேலதிக வழக்கு விசாரணை எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## தண்ணீர்த்...

ஒருவர் தனது பிள்ளையுடன் பூவரசன் குளம், நித்தியநகர் பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு சென்றுள்ளார். அங்கு சிறுமியை நிறுத்திவிட்டு தாய் கச்சான் அறுவடை செய்துகொண்டிருந்தபோது விளையாடிக் கொண்டிருந்த சிறுமி அங்கிருந்த தண்ணீர்த் தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கியுள்ளார்.

கச்சான் அறுவடை செய்துகொண்டிருந்த தாயார் சிறுமியை காணவில்லை எனத் தேடியபோது சிறுமி தண்ணீர்த் தொட்டியில் விழுந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

சிறுமியை மீட்டு பூவசரன்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே சிறுமி மரணமடைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த கிருசாந்தன் தட்சாயினி என்ற 3 வயதுச் சிறுமியே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## வடமராட்சி...

டார் சைக்கிளின் குறுக்கு மாடு பாய்ந்து ஏற்பட்ட விபத்தில் இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில், கரணவாய் மேற்கு, மண்டான் பகுதியை சேர்ந்த செல்வ மோகன் வாணிஜன் (வயது -17) என்பவரே உயிரிழந்தார். இவருடன் பயணித்த சிவநேசன் கலையொளி (வயது 15) என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, குஞ்சர்கடை சந்திக்கும் புறாபொறுக்கிக்கும் இடைப்பட்ட பகுதியில் கண்டர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் மூவர் படுகாயங்களுக்கு இலக்காகினர். மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே இவ்வாறு காயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-2-3)

## மாணவியை...

வருவதாவது,

மாணவி ஒருவர் யாழ்ப்பாணம் நகரில் இருந்து வட்டுக்கோட்டைக்கு பஸ்ஸில் வந்து இறங்கினார். அவரை அழைத்துச் செல்வதற்கு தாயார் மோட்டார் சைக்கிளுடன் காத்திருந்தார்.

இந்நிலையில், ஹை-ஏஸ் வாகனத்தில் வந்த சிலர் தாயாரின் முன்பே மாணவியின் கையைப் பிடித்து வாகனத்தில் ஏற்ற முற்பட்டுள்ளனர்.

மாணவியும் தாயாரும் உதவிக் குரல் எழுப்பவே, அங்கு நின்ற இளைஞர்கள் விரைந்து செயல்பட்டு மாணவியை கடத்த முயன்றவர்களை மடக்கிப் பிடித்தனர்.

அவர்களை 'நன்கு கவனித்த' இளைஞர்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்து வருகின்றனர்.

நாட்டில் சமீப காலமாக சிறுவர்கள் - குறிப்பாக சிறுமிகள் கடத்தப்படல், காணாமல் போதல், படுகொலை செய்யப்படல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பகுதியில் பதற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. (ஐ-5)

## "காய்க்கும்...

றீர்கள்", என்று கேள்வி எழுப்பினர்.

இதற்கு சிரித்தவாறே பதிலளித்த அவர், " நியாயம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது", என்றார்.

இதைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், "கொண்டுவரப்படவுள்ள 21 ஆவது திருத்தச் சட்ட மூலம், உங்களை இலக்கு வைத்ததாக உள்ளதே. 21 ஆவது திருத்தச் சட்டம் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்", எனக் கேட்டனர்.

இதற்கு பஸில் ராஜபக்ஷ "காய்க்கும் மரம்தான் கல்லடிபடும்", என்றார். தொடர்ந்து, "21 ஆவது திருத்தச் சட்டத்துக்கு, பொதுஜன பெரமுன ஆதரவளிக்குமா", என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களையே கேட்க வேண்டும். பொறுத்திருந்து பார்ப்போம்", என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# பயணப் பைகளின் விலையும் உயர்வு

*கொழும்பு, ஜூன் 04*

*பாடசாலை, தொழில், வெளிநாட்டுப் பயணங்களுக்குப் பயன்படுத்தும் பைகள் உள்ளிட்ட அனைத்து வகையான பயணப் பைகளின் விலைகளும் கணிசமான அளவு அதிகரித்துள்ளன.*

*உள்நாட்டு உற்பத்தி தட்டுப்பாடு மற்றும் கடந்த சில மாதங்களாக நிலவும் இறக்குமதி கட்டுப்பாடு என்பன இதற்குக் காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*உள்நாட்டு பைகள் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் பற்றாக்குறை மற்றும் அவற்றின் விலைகள் அதிகரித்தமையும் இந்த விலை அதிகரிப்புக்குகே காரணமாகும் என உள்ளளூார் பைகள் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.* *(அ)*

# பாராளுமன்றத்துக்கு கூடுதல் பாதுகாப்பு

*கொழும்பு, ஜூன் 04*

*பாராளுமன்றுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.*

*தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்களை பார்க்கும்போது பாராளுமன்றுக்கு கூடுதல் பாதுகாப்பு தேவை என்பதே புலனாகின்றது என அவர் குறிப்பிட்டார்.*


*சிலர் நாட்டின் சட்டங்களை உரிய முறையில் பின்பற்றுதில்லை என ஊடகமொன்றுக்கு தெரிவித்த சபாநாயகர் , இதன்படி பாராளுமன்றில் கூட்டங்களை நடத்தும்போது தற்போது வழங்கப்படும் பாதுகாப்பை விடவும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியம் என தெரிவித்தார்.*

*பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பகல் உணவு வழங்குவதனை நிறுத்தினால், வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வர நேரிடும் எனவும் இது பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறினார்.*

*கடந்த காலங்களில் உணவு பொதிக்குள் குண்டு வைத்து பாராளுமன்றுக்கு கொண்டு வரப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.* *(அ)*

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 08 - 01 - 1963



**மறைவு** 30 - 05 - 2022

### பெஞ்சமின் சாம்சன் கனிசியஸ்

*(ஒப்பனைக் கலைஞர், திருமறைக் கலாமன்றம் - பிரான்ஸ்)*

யாழ்ப்பாணம், பழைய பூங்காவீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட பெஞ்சமின் சாம்சன் கனிசியஸ் கடந்த 30.05.2022 திங்கட் கிழமை பிரான்ஸில் கலாமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பெஞ்சமின் - மேரி திரேசா தம்பதிகளின் அன்பு மகனும், இம்மானுவேல் (பிரான்ஸ்), அன்ரனி(கொழும்பு), அலோசியஸ் (பிரான்ஸ்), மேரிமெக்டலின் (கொலண்ட்), சாள்ஸ் (யாழ்ப் பாணம்), டன்ஸ்ரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரிராணி (பிரான்ஸ்), ஸ்ரெலா (கொழும்பு), காந்தறூபி (பிரான்ஸ்), தங்கராசா (கொலண்ட்), காலஞ்சென்ற எளில் வானம்பாடி மற்றும் செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தீபன் - ஏஞ்சல் (கனடா), தீபா- சுரேன் (லண்டன்), ஷோபா- ஜெயந்தன் (கனடா), யூட் (கொழும்பு), கிறேசன் (டோகா), அகல்யா- தொம்சன் (பிரான்ஸ்), சுவேந்திரா (பிரான்ஸ்), நோயல் (கனடா), நொய்னி (கனடா), யஸ்மின் (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கொலின் - கிம் (கொலன்ட்), சாரா - சுகந்தன் (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பிரான்ஸில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.96, பழையபூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
**பெஞ்சமின் சாள்ஸ் - (சகோதரன் )**
071 915 9369, 0714631989

தொடர்புகளுக்கு:
**இம்மானுவேல் - சகோதரன்** Mobile : +33771841089
**அன்ரனி - சகோதரன்** Mobile : +94714741521
**அலோசியஸ் - சகோதரன்** Mobile : +33781458256
**மேரி மெக்டலின் - சகோதரி** Mobile : +31640847080
**டன்ஸ்ரன் - சகோதரன்** Mobile : +16134403447

## மரண அறிவித்தல்



### சின்னையா தங்கராஜா

**(B.A. Ceylon)**

*(ஓய்வுநிலை உத்தியோகத்தர், ஹற்றன் நஷனல் வங்கி)*

சாவகச்சேரி மந்துவிலை பிறப்பிடமாகவும் இலக்கம் 60 பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னையா தங்கராஜா அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை (03.06.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா பொன்னி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மருகனும் கனகர், இரத்தினேஸ்வரியின் அன்பு சகோதரனும் றெபேக்கா ஜீவமணியின் பாசமிகு கணவரும் Dr. கவிதா (பல் வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), Dr. காண்டீபன் (மருத்துவ நிர்வாகி - சுகாதார அமைச்சு), மயூரன் (பிரதி முகாமையாளர் - இலங்கை வங்கி - சென்னை), தாரணி (ஆசிரியை தகவல் தொழில்நுட்பம் - வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்) Dr. கஸ்தூரி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெஷாந்தன் (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்- யாழ். பல்கலைக்கழகம்), யசோதினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்), லக்ஷினி (மென்பொருள் கட்டுமானர்), தினேஷ் (உத்தியோகத்தர் - டான் ரீவி), Dr. ஜீவகன் (ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிறையன், தக்ஷரா, தருணிகா, டெலிஷ், தியத்திரா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை (05.06.2022) இல. 60, பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, முற்பகல் 10 மணியளவில் பரி. யோவான் திருமுழுக்குநர் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்*
**Dr. கவிதா ஜெஷாந்தன்** *- 077 127 5258*
**Dr. தங்கராஜா காண்டீபன்** *- 077 775 5035*

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 07 - 06 - 1933



**மறைவு** 02 - 05 - 2022

### திருமதி மாணிக்கவாசகர் நாகம்மா

முல்லைத்தீவு செம்மலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் நாகம்மா அவர்கள் 02.06.2022 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு மனைவியும்,வையந்திமாலா, விஜயகுமார் (ஓய்வுபெற்ற பாடவிதான உத்தியோகத்தர் விவசாய திணைக்களம், அகில இலங்கை சமாதான நீதவான் - முல்லைத்தீவு), காலஞ்சென்ற ஜெயக்குமார்(பிரான்ஸ்), இராசகுமார் (முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு), காலஞ்சென்ற அபிமன்னகுமார்(பிரதேச சபை முல்லைத்தீவு), உதயகுமார்(ஓய்வுபெற்ற அதிபர்), ஜீவகுமார் (லண்டன்), குலசகுமார்(லண்டன்), மோகனகுமார்(லண்டன்), ரதிக்குமார்(ஆசிரியர் - மாங்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்றவர்களான கண்ணகை, கதிரவேலு, இராமலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,பத்மாவதி, காலஞ்சென்ற குணசேகரம் பிள்ளை, புவனேஸ்வரி (வுவுனியா புதுக்குளம்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பொன்னம்பலம், வசந்தராணி, ஜெயராணி (பிரான்ஸ்), அனந்தநாயகி, இந்திராணி, இராஜசௌந்தரி, நகுலேஸ்வரி(லண்டன்), தர்மேஸ்வரி(லண்டன்), மணிமாலா (லண்டன்), நடேஜினி(ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும்,மாலதி(பிரான்ஸ்), வசந்தி, சுமதி, அன்பழகன்(பிரான்ஸ்), நவநீதன்(ஐநா சபை அதிகாரி -கென்யா), நவரூபன்(நோர்வே), மதிவதனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் விவசாயத் திணைக்களம் - முல்லைத்தீவு), மதிவண்ணன்(லண்டன்), மதிமாறன், விஜயன்(பிரான்ஸ்), கஜன்(பிரான்ஸ்), ஜெயன்(பிரான்ஸ்), கஸ்தூரி(நோர்வே), துசியந்தன்(லண்டன்), வித்தியா (பிரான்ஸ்), யுகதர்சன்(வித்தியானந்தா கல்லூரி பழைய மாணவர்), சம்சியா(அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஜதுர்ஷியா, விதுவந்தி, கஜானன், கீர்த்தனா, சேரலாதன் (ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்), இங்கிதன்(லண்டன்), இனிதினி(லண்டன்), அவனி(லண்டன்), பிரான்சிகா (லண்டன்), பிரதிகா(லண்டன்), தர்ஷியா(லண்டன்), சாத்வீகன்(லண்டன்), லுசிந்தன்(லண்டன்), பவதாரணி (லண்டன்), அஜிந்தன்(வவுனியா), கிரிந்திகன்(வவுனியா), ருலக்ஷன்(வித்தியானந்தக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேத்தியும்,அருந்ததி, பாரதி, ரவிவர்மன், தமயந்தி, தனுஷன், தஞ்சுதா, துஸ்யந்தி, சகிலன், நிறோஜன், இனியவன், ஆரன் , சாதுஜன், ஆத்விகா, காவியன், அபிதன், இலக்கியன், ருலக்ஷி, அகரா, வெண்பா, நிகிதா, கிருத்வி, அவந்திகா, தனுருத், சஞ்சய் ஆகியோரின் அன்புப் பூட்டியும்,முகிலன், சுருதி, சுதிக்ஷா, ஜாஸ்வின், மகிஷன், லக்ஷயா, மைதுகி ஆகியோரின் பாசமிகு கொப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் 3ம் கட்டை சிலாவத்தை எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது மகன் விஜயகுமார் இல்லத்தில் நடைபெற்று பின்னர் செம்மலை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மோகனகுமார் - மகன்.**

தொடர்புகளுக்கு:
**மோகனகுமார் - மகன்** Mobile : +447405322916
**விஜயகுமார் - மகன்** Mobile : +94773211180

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE - சேவல்
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்-எம்.ஆர். ராதா



05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : - எதுசரி எதுபிழை-தமிழ்த் தேசிய கட்சிகளின் மக்களுக்கான பொருளாதார கொள்கைகள் என்ன?



**இரவு**

07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்-இன்றைய சூழலிலே இளைய தலைமுறையினருடைய புலப்பெயர்வு என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா இல்லையா?
10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு